Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | வைகாசி-07 | 21-05-2005 | சனிக்கிழமை | ஓசை 92


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247 (சி-11901)

# திருமலை நகரம் 4ஆவது நாளாக ஸ்தம்பிதம்

# பொலிசார் - சிங்களக் காடையர் அராஜகம்!



## பாதுகாப்பு வழங்கக்கோரி பெண்கள் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் சத்தியாக்கிரகம்

(திருமலை)

**திருமலை நகரில் திடீரெனத் தோன்றிய புத்தர்சிலை காரணமாக ஏற்பட்ட பதற்றநிலை நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்து இயல்பு நிலை பாதிக்கப்பட்ட நிலையில் ஆங்காங்கு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு, சிறிலங்காப் பொலிசாரும், சிங்களக் காடையர்களும்இணைந்து தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். இதேவேளை, பாதுகாப்பு வழங்கக்கோரி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்னால் பெண்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.**

திருகோணமலை நகரில் நான்காவது தினமான நேற்றும் பதற்றம் நிலவியது. பாடசாலைகள், மாகாண சபை அலு வலகங்கள், மத்திய அரச அலுவல கங்கள், வங்கிகள் நேற்றும் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டிருந்தன. நகர சபை மற்றும் உள்ளூராட்சி, சர்வதேச மற்றும் உள்ளூர் தன்னார்வ அமைப்புக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம்-புலிகள் யாழ்.இல் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்குமிடையிலான சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்துள்ளது. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரிகளின் ஏற்பாட்டின் பேரில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் உணவகங்கள் மற்றும் நிறுவனங்களின் விபரங்கள் மற்றும் உரிமையாளர்கள் பணியாளர்களின் விபரங்களை யாழ். மாவட்ட படையினர் திரட்டி வருவதற்கு விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் முன்னிலையில் இராணுவ அதிகாரிகளிடம் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர்சிலை விவகாரம் குறித்து இன்று திருமலை கடற்படைத் தளத்தில் மாநாடு

(திருகோணமலை)

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முக்கிய மாநாடு ஒன்று திருகோணமலை கடற்படைத் தளத் தலைமையகத்தில் நடைபெறவிருக்கின்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன, முப்படைகளின் பிரதம தளபதியான கடற்படைத் தளபதி தயாசந்தகிரி, இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா, பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோ ஆகியோர் இம் மாநட்டில் பங்கு பற்றுவர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பாதுகாப்பை அதிகரிக்க யாழ்.சென்ற இராணுவத்தளபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் இராணுவப் பாதுகாப்பினை மேலும் பலப்படுத்துமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டேகொட உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதிகாரபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்த சிறிலங்கா இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட்ட படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விஜயத்தின்போது படைத் தளபதி சாந்தகொட்டே கொட வடமராட்சி , தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று அங்கு பாதுகாப்பு நிலைமைகள் பற்றி படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருப்பதுடன், முன்னணிக்காவலரண்களுக்கு நேரில் சென்று அங்கு பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்ந்ததாகவும், இவருடன் வேறு சில படைதளபதிகள் வந்திருந்ததாகவும் தெரியவருகிறது.. (33)

## யாழ்.இல் ஊடகவியலாளருக்கு இனந்தெரியாதோர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு ஊடகவியலாளர்கள் சிலருக்கு இனந்தெரியாதோரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ். குடாநாட்டு ஊடகவியலாளர்கள் சிலரை இனந்தெரியாத நபர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் பின் தொடர்வதாகவும், வீட்டு முகவரிகள் ,அவர்களுடன் தொடர்புள்ள ஊடக நிறுவனங்கள் என்பவற்றைச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் இனந்தெரியாத நபர்கள் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரமுனை அரசியல்துறை அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு- மூன்றுபோராளிகள் படுகாயம்

அம்பாறை மாவட்டம் வீரமுனையிலுள்ள விடுதலைப்புலிகளின் பிரதேச அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் மூன்று அரசியல்துறைப் போராளிகள் காயமடைந்தனர்.

விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசத் தில் இந்தச் சம்பவம் நடந்தது. நேற்று மாலை நான்கு மணியளவில் உந்துருளியில் வந்த இரண்டு நபர்கள் அங்கு நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்

(12ஆம் பக்கம் பார்க்க)

-உடையார்கட்டில் வீதிவிபத்து-

## உந்துருளியில் சென்ற வட்டுகோட்டைவாசி மரணம்

உடையார் கட்டுப் பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். நேற்று மாலை சுமார் 4.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் முல்லை வீதிவழியே முல்லை நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்திற்குப் பின்னால் சென்று கொண்டிருந்த உந்துருளி உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல எத்தனித்த வேளை புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**விசேட ஆங்கில வகுப்புக்கள்**
**GRAMMAR@ SPOKEN**

O/L, A/L மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்- புதன்,சனி,ஞாயிறு மாலை 5-6 மணி, இடம்-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் கிழக்கு. ஆசிரியர்-K.YOKAN (BBAANDe) (6141)

**விற்பனைக்குண்டு**

இ.நிர்மலன் ஆசிரியன் விஞ்ஞானமும்,தொழில்நுட்பவியலும் தரம் 7 முதல் O/L வரை விரிவான பாடப் பரப்பு, பரீட்சைவழிகாட்டிகள், விஞ்ஞான விளக்கங்கள் மற்றும் இலவசப் பரீட்சை வினாத்தாள்கள். தரம் 1,2,3,4 அனைத்து பாடங்களும் அடங்கிய பரீட்சைவழிகாட்டிகள் வன்னியிலுள்ள அனைத்து அறிவமுது பொத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 0777413990. (6088)


# எந்தக்காரியமானாலும் அதன் இயங்குசக்தி மக்களும்,நிர்வாக அமைப்புக்களுமாகும்

## -தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர்

(உடையார்கட்டு)

எந்தக்காரியமாக இருந்தாலும் அதன் இயங்குசக்தி என்பது அங்குள்ள மக்களையும், நிர்வாக அமைப்புக்களையும் கொண்டது.

இவ்வாறு தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற தேசிய எழுச்சிப் பேரவைத்தெரிவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்;

எமது மாவீரர்களின் தியாகத்தால் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள். அதேபோன்று ஏனைய தமிழர் பிரதேசங்களிலும் எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும்.

வன்னிப் பகுதியில் மக்களுக்கு விடுதலைப்புலிகளால் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. உடையார் கட்டில் பல்வேறு பொது அமைப்புக்கள் உள்ளன. எல்லாக் கட்டமைப்பும் ஒருங்கிணைந்த ஒரு செயற்பாட்டுக்குள் உருவாக வேண்டும்.

எல்லாக் கட்டமைப்பும் ஒருங்கிணைந்து செயற்படுமானால் இந்தப் பிரதேசத்தினுடைய மக்களது வாழ்வுக்காக உழைக்கக் கூடியதாக இருக்கும்.

தனி ஒருவரால் இப்பிரதேசத்தை முன்னேற்ற முடியுமா? என்றால் அது சாத்தியமே இல்லை.

உடையார்கட்டுப் பிரதேசம் ஒரு பெரிய பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் கடினமான உழைப்பாளிகள். நீண்ட கால வாழ்வுரிமையைக் கொண்டவர்கள். அவர்கள் தொடர்ச்சியாக சகல போராட்ட கடமைகளுக்கும் முகம் கொடுத்து வந்தவர்கள். இந்த விடுதலைப்போராட்டத்திற்காக சகலவிதமான அர்ப்பணிப்புக்களையும் செய்து வந்த மக்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (19)

# தேராவில் குளத்தடிப்பகுதியில் பாரவூர்தி பள்ளத்தில் வீழ்ந்தது

(உடையார்கட்டு)

உடையார் கட்டு தேராவில் குளத்தடிப்பகுதியில் பாரவூர்தி ஒன்று பாதையை விட்டுவிலகி பள்ளத்தினுள் வீழ்ந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் 1.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து விசுவமடுப் பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தியே விபத்துக்குள்ளானது. எதிரே வந்த உந்துருளி ஒன்றுக்கு வழிவிட எத்தனித்த வேளையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பாரவூர்தி பலத்த சேதமடைந்துள்ளது. எவருக்கும் காயங்களோ, உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை. (19)



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு வேள்விசன் நிறுவனம் 92 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை பிரதி சுகாதார சேவைப்பணிமனையில் வைத்து வழங்கிய நிகழ்வின் போது கலந்து கொண்டோர். (20)

# கிளி.மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கல்



(அலுவலகசெய்தியாளர்)

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவின் கீழ் கனடா நாட்டில் வாழும் திருமதி யூடி ஞானேந்திரன் அவர்கள் கிளி/மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையினை வழங்கியுள்ளார்.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் கற்றலில் ஆர்வமுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்காக இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று காலை 10.30 மணியளவில் பாடசாலை பிரதி அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத் தலைவர் செல்வநாயகம், கணக்காளர் சிறிபாலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமூகபொருளாதார அபிவிருத்தி நிறுவனத் தலைவர் செல்வநாயகம் அவர்கள் செல்வி.சகிலா, ம.விஜிதா, இ.ஜீவசிறி, வை.விஜிதரன் ஆகியோருக்கு உதவு தொகையை வழங்கி வைத்தார். இம் மாணவர்களின் கற்றலுக்காக மாதாந்தம் ஆயிரம் ரூபா கல்வி கற்கும் காலம் வரை வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)


care

CARE INTERNATIONAL-SRI LANKA, **one of the world's largest international relief and development organizations working towards economic and social empowerment of poor and marginalized communities, is looking for extremely committed individuals who are willing to put in their best to be part of an energetic team of development professionals engaged in the Tsunami Emergency Relief Operations in Srilanka.**

***Kilinochchi:***

*1.Manager- -Quality and Learning: a Professional to ensure that organizational Lerning from the activities basket is shared and learning improves quality of services to the community.*
*2.Co-Ordinator -Civil Engineering: a qualified engineer to lead CARE'S shelter building and water sanitation provision for the Tsunami affected populace.*
*3.Co-Ordinator -Fisherice: to execute livelihoods activities related to the fishery sector.*
*4.Gender Co-ordinator -to advise the office on gender equity in the project.*
*5.Co-Ordinator -Environment: to design activities for environmental protection in the post Tsunami program.*
*6.Co-Ordinator -Advocacy: to inform and lobby with stakeholders on CARE'S philosophy, work achievements.*
*7.Co-Ordinator -Monitoring and Evaluation.*
*8.Program support Co-ordinator -to lead all support activities, including finance, HR, procument, Administration.*
*9.Program officer -information: will collate information frcm various project sites for presentation to management and stakeholders, develop MIS processes.*
*10.Program officer -Reporting will document CARE's Experience for sharing and reporting.*
*11.Procument assistance -assist in all purchases functions*
*12.Logistics Assitance -arrange transport and other requirements for the office.*

***Vadamarachchi East:***

*1.Co-Ordinator -Shelter and watsan: a qualified civil engineer with experience in emergency shelter programs and water and sanitation project.*
*2.Co-Ordinator -Capacity Building.*
*3.Co-Ordinator -Psychology.*
*4.Co-Ordinator -Community consultation: a professional to lead CARE' work in social consultation for its basket of activities.*
*5.Project officers- (3)*
*6.Administration and Finance assistance.*
*7.Logistic assistant.*

***Puthukuddyyiruppu:***

*1.Co-Ordinator -Shelter: a qualified engineer with experience in emergency shelter programs.*
*2.Co-Ordinator -Watsan: a qualified engineer with experience in managing water and sanitation projects.*
*3.Co-Ordinator -Livelihood.*
*4.Co-Ordinator -Community consultation.*
*5.Co-Ordinator -Psychosocial.*
*6.Co-Ordinator -Capacity Building.*
*7.Co-Ordinator -Program Support.*
*8.Project assistants*

*All positions would require 01 to 03 years of relevant experience and appropriate academic/ professional qualification. On the application as well as on the top left-hand corner of the envelope, please indicate clearly the location and position you are applying for.*

***Please apply immediately** with names, address and telephone numbers of two non-related referrers. We thank all applicants, but only short-listed candidates will be contacted.*

**Director-Human Resource**
**CARE INTERNATIONAL-SRILANKA**
**7A,Gregory's Road,**
**Colombo 07.**
**E.mail:hrd@care.lk.**

**WOMEN ARE ENCOURAGED TO APPLY CARE IS AN EQUAL OPPORTUNITY EMPLOYER**

(சி.12009)

# ஆச்சே மாகாணத்தின் மீதான அவசர காலச்சட்டம்

# இந்தோனேஷியா நீக்கியது; சமாதானத்திற்கான அறிவிப்பாம்

(ஜகார்த்தா)

**இந்தோனேஷிய அரசாங்கம் ஆச்சே மாகாணத்தின் மீது அமுல் படுத்தியிருந்த அவசர காலச்சட்டத்தை நீக்கியுள்ளது. இதனால் அங்கு சமாதானம் ஏற்படுவதற்கான ஏதுநிலை தோன்றியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

ஆச்சே மாகாணத்தின் சுதந்திர இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்த ஒரு வார காலம் இருக்கையில் அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டிருப்பதை சகலரும் வரவேற்றுள்ளார்கள்.

இந்தோனேஷியாவின் உட்துறையமைச்சர் இம் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் அடுத்த சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கக் குழுவிற்குத் தலைமை தாங்கி கலந்து கொள்வார்.

ஆச்சே மாகாணப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.



பாக்தாத்தில் பள்ளி வாசல் ஒன்றில் நேற்று முன்தினம் கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தை மேற்பார்வையாளர்கள் அவதானிக்கின்றனர்.



பாக்தாத்தில் சியா முஸ்லிம் பள்ளிவாசலில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் சேதமுற்ற வாகனத்தைக் கடந்து செல்லும் குடியிருப்பாளர்கள்.

## சுமாத்திராவில் மீண்டும் பூகம்பம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவில் நேற்று முன்தினம் காலை 7.25 மணிக்கு பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதன் வீரியம் 6.3 ரிச்டர் அளவாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பூகம்பம் காரணமாக உயிர்ச்சேதமோ, பொருட் சேதமோ எதுவும் ஏற்படவில்லை. வீடுகள் அதிர்ந்ததால் மக்கள் பீதி அடைந்தனர். சுனாமி ஏற்படலாம் என்ற அச்சமும் அவர்களைப் பிடித்து ஆட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பெண்ணைக் கல்லால் அடித்துக் கொல்ல ஈரான் நீதிமன்று தீர்ப்பு வழங்கியது

(டெக்ரான்)

ஈரானைச் சேர்ந்த பெண்ணொருவரைக் கல்லால் அடித்துத் கொல்லுமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஈரானைச் சேர்ந்த 25 வயதுப் பெண் பாத்திமா இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இவர் பக்கத்து வீட்டைச் சேர்ந்த 22 வயது இளைஞர் மக்மூத் குத்தார்சியுடன் கள்ளத் தொடர்பு கொண்டு இருந்தார்.

கணவரை விவாகரத்துச் செய்து விட்டுத் தன்னை மணந்து கொள்ளும்படி மக்மூத், பாத்திமாவை வற்புறுத்தினார். இதற்குப் பாத்திமா சம்மதிக்கவில்லை.

தன் கள்ளக் காதலைக் கணவனிடம் தெரிவித்து "என்ன தண்டனை கொடுத்தாலும், ஏற்கத் தயார் என்று கூறினார். தன் குழந்தைகளுக்காகப் பாத்திமாவின் கணவர் பாத்திமாவை மன்னித்தார்.

பிறகு கணவருடன் சேர்ந்து கள்ளக் காதலனைக் கழுத்து நெரித்துக் கொன்றார். பாத்திமா மீது தவறான உறவு வைத்திருந்ததாக வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி பாத்திமாவைக் கல்லால் அடித்துக் கொல்லும்படி தீர்ப்பு வழங்கினார். கல்லால் அடித்துக் கொல்லும் தண்டனை கடந்த சில ஆண்டுகளாக நிறைவேற்றப்படாதுள்ளதால் அவர் உயிர் வாழ வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

## இத்தாலியிலுள்ள மலைச்சிகரத்திற்கு மறைந்த போப்பின் பெயர் சூட்டப்பட்டது

(ரோம்)

இத்தாலியிலுள்ள ஒரு மலைச் சிகரத்திற்கு மறைந்த போப்பாண்டவர் ஜோன்போல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

27 ஆண்டு காலமாக உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவராக இருந்தவர் போப்பாண்டவர். இப்போது போப்பாண்டவராக பெனடிக் இருக்கிறார். இவருக்கு முன்பு போப்பாண்டவராக இருந்தவர் ஜோன்போல். இவர் கடந்த மாதம் மரணமடைந்தார்.

இவர் மலைகளை நேசிக்கக் கூடியவராக இருந்தார். அவர் தன் இளம் வயதில் மலை ஏறுவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். தனிப்பட்ட முறையில் மலையின் அழகால் ஈர்க்கப்பட்டு அடிக்கடி வத்திக்கான் தலைநகரை விட்டு மலைப் பகுதிக்குச் சென்று அதன் அழகில் லயித்து நிற்பாராம்

இத்தாலியின் மையப் பகுதியிலுள்ள கிரான் சாசோ மலைப் பகுதிக்குத் தனிப்பட்ட முறையில் சென்று வருவார்.

கிரான் சாசோ மலையிலுள்ள ஜெண்டார்மே என்று ஒரு சிகரம் உள்ளது. அது ஏழாயிரத்து 953 அடி உயரம் கொண்டது. இந்தச் சிகரத்திற்கு போப்பாண்டவர் ஜோன்போல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.



கடந்த புதனன்று ஜோன் போலுக்கு 85ஆவது பிறந்த தினமாகும். அதையொட்டி அங்குள்ள தேவாலயத்தில் நடந்த விழா வில் மலைச்சிகரத்திற்கு ஜோன் போல் பெயர் சூட்டப்பட்டது.



அமெரிக்காவின் மெரிலேண்ட் பகுதியில் உள்ள கடற்படையில் புதிதாகச் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு தினமும் அளிக்கப்படும் பயிற்சி இது மனித கோபுரமமைத்து அவர்கள் அங்குள்ள நினைவுச் சின்னத்தின் மீது ஏறி ஒரு தொப்பியை வைக்க வேண்டும்.

## சர்வதேச சமூகத்தின் கோரிக்கை உஸ்பெகிஸ்தான் சனாதிபதி நிராகரிப்பு

கடந்த வாரம் தமது நாட்டில் இடம்பெற்ற வன்முறை ஆர்ப்பாட்டங்கள் பற்றி பராபட்சமற்ற விசாரணைகளை நடத்துமாறு சர்வதேச சமூகம் விடுத்த கோரிக்கையை உஸ்பெகிஸ்தான் சனாதிபதி நிராகரித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது அவரது துருப்புக்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றிய சரியான தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கிளர்ச்சியாளர்களோடு தொடர்புடைய 169 பேர் மாத்திரமே கொல்லப்பட்டுள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் 500 பேர் வரை பலியானதாக நேரில் கண்டோர் கூறுகின்றார்கள். இது பற்றி விசாரணை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

## தீர்வு காணும் காலம் கனிந்துள்ளது

குர்ஷித் கசூரி

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு இரு தரப்பு உடன்பாட்டை எட்டுவதற்கான காலம் கனிந்து விட்டது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் தற்போதுள்ள இணக்கமான சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்தி நீண்ட காலமாய் இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## சீனா- தாய்வானுக்கிடையிலான போக்குவரத்து சீராகும் அறிகுறி

சீனாவிலிருந்து தாய்வானுக்கு விஜயம் செய்வது தொடர்பான தடைகள் நீக்கப்படக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

பிரதான நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் தமது அரசியல் பகையாளியான தாய்வானுக்குச் செல்வதற்கு விதித்திருந்த பல தசாப்த காலத் தடைகளை சீன அரசாங்கம் நீக்கியிருப்பதாக அந்நாட்டு அரசாங்க ஊடகங்கள் அறிவித்துள்ளன.

சீனா தாய்வானைப் பிரிந்து சென்ற மாநிலமாகவே கருதுகின்றது. தாய்வான் சுயாட்சியுடைய சுதந்திர நாடாகவே மாறுவதற்கு விரும்புகின்றது.

1949 ஆம் ஆண்டு முடிவடைந்த சிவில் யுத்தத்தின் பின்னர் சீனத் தேசிய வாதிகள் தாய்வானுக்கு தப்பிச் சென்றிருந்தார்கள். அந்தக் காலப்பகுதி தொடக்கம் இன்று வரை பிரதான நிலப்பரப்பைச் சேர்ந்தோர் தாய்வானுக்குச் செல்வது தடை விதிக்கப்பட்டுள்ளது .

## காண்டாமிருகக் குட்டிக்கும் ஆட்டுக்கும் ஏற்பட்ட உறவு

(ஜோகன்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் ஜோகன்ஸ்பேர்க் அருகே உள்ள மிருகக் காட்சிச்சாலையில் 11 மாத காண்டா மிருகக் குட்டியுள்ளது. இதன் தாயை வேட்டைக்காரர்கள் கொன்று விட்டதால் இது அநாதையாகி விட்டது. இப்போது இது போக்கோக் எனப்படும் ஆட்டுக் குட்டியுடன்தான் எப்போதும் சேர்ந்தேயுள்ளது. போக்கோக்குக்கும் தாய் இல்லை.

"இந்த இரண்டு மிருகங்களும் ஒன்றாகச் சேர்ந்து சுற்றுவது எல்லோருக்கும் அதிர்ச்சியை அளித்தது. இரண்டு வேறு இனங்களைச் சேர்ந்த குட்டிகளுக்கு எப்படி பிணைப்பு ஏற்பட்டது என்பது தெரியவில்லை" என்று மிருகக் காட்சிச் சாலை ஊழியர் பிரான் பெர்கோவிட்ஸ் கூறினார்.

" காண்டாமிருகத்தைத் தனியாகப் பிரித்து விட்டால் ஆடு பைத்தியம் பிடித்தது போல் ஆகி விடுகிறது" என்றும் கூறுகின்றார்.

## காணியற்ற விவசாயிகள் ஆர்ப்பாட்டம்; பொலிசார் தாக்கு பிரேசிலில் 40 பேர் காயம்

பிரேசிலில் காணியற்ற விவசாயிகள் தமக்கு அரசாங்கம் காணிகளை விரைவில் வழங்கவேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டப் பேரணி நடத்திய போது வன்முறைகள் வெடித்ததனால் கலகத் தடுப்பு பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 40 இற்கும் அதிகமான விவசாயிகள் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 12 ஆயிரம் விவசாயகள் கலந்து கொண்டார்கள் 150 மைல் ஊர்வலமாகச் சென்று சனாதிபதியைச் சந்திக்க முற்பட்ட போது மோதல்கள் ஏற்பட்டன. பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்ததிலே இவ் விவசாயிகள் காயங்களுக்கு உள்ளாகினார்கள். மேலும் 20 இராணுவப் பொலிசாரும் காயமடைந்துள்ளார்கள்.

# முள்ளியவளை அரசினர் மருத்துவமனையில்

# ஒரேயொரு வைத்திய அதிகாரி மட்டும் கடமை

## -அவரும் பகுதி நேரமாகவே நியமனம்

(முள்ளியவளை)

**முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக் குறையால் நோயாளர் அவலப் பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. மேற்படி வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரியே கடமையாற்றி வருவதுடன் இவ் வைத்திய அதிகாரி முல்லைத்தீவு வைத்தியசாலையிலும் கடமை புரிந்து வருகின்றார்.**

இதேவேளை மேற்படி வைத்திய சாலைக்கு நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர் வருவதை அவதானிக்க முடிந்தபோதும் நோயாளர்கள வைத்தியசாலையில் இருப்பிடம் இன்றி அவலப்படுவதுடன் ஒரு வைத்திய அதிகாரி என்பதால் நீண்ட நேரம் நின்று மருந்து எடுக்க வேண்டிய நிலையும், சிலர் மருந்து எடுக்க முடியாது திருப்பிச் செல்லும் நிலையும் உருவாகியுள்ளது.

தற்போது ஒருவகையான காய்ச்சல் பரவியுள்ளதால் பெருமளவான நோயாளர்கள் குமுழமுனை, கூளாமுறிப்பு போன்ற சுமார் 8கி. மீ. தூரத்தில் இருந்து வந்தும் பெரும் அவல நிலைக்குள்ளாகி வருகின்றனர் (ஆ)

# காவல்துறையால் மீட்கப்பட்ட அநாதரவான சிறுவன்

### பாதுகாவலரைத் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

மாங்குளம் பகுதியில் அநாதரவான நிலையில் அலைந்து கொண்டிருந்த 14 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தொடர்பாக பொது மக்கள் வழங்கிய தகவலைத் தொடர்ந்து, மாங்குளம் காவல் பணிமனையினரால் குறித்த சிறுவன் விசாரணை செய்யப்பட்டபின், மல்லாவி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி இவரது பெயர் சாந்தகுமார் ராஜ்குமார், நிரந்தர முகவரி கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம், எனத் தெரியவருகின்றது. ஆகவே இப்புகைப்படத்தில் காணப்படும் சிறுவனின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தாமத மின்றி மாங் குளம் காவல்பணி மனையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (தீ)

# கணினிப் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்

சமுதாய முன்னேற்ற நிலையத்தில் கணினிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் கிளிநொச்சி வயலக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையோடு தகவல் தொழில்ப் பயிற்சி நிலையத்தினூடாக நடாத்தப்பட்ட அடிப்படை, மேலதிக கணினி கற்கை நெறியின் நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வுமாகிய இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு ஜெயந்திநகர் சமுதாய முன்னேற்ற நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கணினிப் பயிற்சி நெறியில் கல்விகற்ற மூன்றாவது பிரிவு மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கவென ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளரால்



தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டது அடுத்து மண்டபத்தினுள் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் தமக்கு இப்பயிற்சி நெறியைக் கற்பித்த ஆசிரியர்களை வாழ்த்தி வாழ்த்து மடல்களை வழங்கினர். கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் மாணவர்களை வாழ்த்தி உரையாற்றினார். தொடர்ந்து சிறப்புரைகளை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியும் நிகழ்த்தினர். அடுத்து பயிற்சியை வழங்கிய ஆசிரியர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கியதை தொடர்ந்து பயிற்சியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு தொடர்ந்து ஏனைய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களையும், பரிசில்களையும் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் மற்றும் பொறுப்பாளர்களும் வழங்கிக் கௌரவித்தனர். (ச,கு)

### முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா

பெரியகுளம் பகுதியில் நிரந்தர முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவர் பாபு தலைமையில் இடம்பெற்றது. தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றினார். அடிக்கல்லினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரவேலும் பிரதேசஅரசியல் துறைப்பொறுப்பாளர் சுடரும் நாட்டி வைத்தனர். கருத்துரைகளைப் பிரதேசஅரசியல் துறைப்பொறுப்பாளர் சுடரும் பெரிய குளகிராம சேவையாளர் திருமதி. சிவராசாவும் நிகழ்த்தினார்கள். (12)

### மேஜர் முரளி முன்பள்ளி விளையாட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

மேஜர் முரளிமுன்பள்ளி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2-30 மணிக்கு கிளிநொச்சி பரவிப் பாஞ்சான் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வில் அனை வரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர். (சோ)

# கல்மடுநகர் சம்புக்குள சனசமூக நிலையகட்டடத்திறப்பு

(வட்டக்கச்சி)

கல்மடு நகர் சம்புக்குள சனசமூக நிலையக் கட்டடத்திறப்புவிழாவானது முன்னாள் சனசமூக நிலையத்தலைவா சதாசிவமும் தலைமை உரையினை தலைவர்இராமஜெயம், கண்டாவளைப




நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் நிலையத்தலைவர் ரே.இராமஜெயம் தலைமையில் இடம்பெற்றது.

புதிய சனசமூக நிலையத்துக்கான பெயர்ப்பலகையினை முன்னாள் கிராமசேவையாளர் தெய்வவேற்பரமநாதன் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தின் நுழைவாயில் நாடாவினை கண்டாவளைப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன் திறந்துவைத்தார் வரவேற்புரையினை பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன், சனசமூக நிலையம் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயமாலினி, இராமநாதபுர கிழக்குஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முதல்வர் புண்ணியமூர்த்தி, கல்மடுநகர் பாட சாலை முதல்வர் ரவீந்திரன், கிராம சேவையாளர் பரமதாஸ், பிரதேசப் பொறுப்பாளர் சுடர், தேசிய எழுச்சிப் பேரவை உபசெயலாளர் தர்மசூரியர் ஆகியோரும் நிகழ்த்தினர். (12)

## -வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலய-

# உற்சவகால உணவுகையாளும் நிலையங்களில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் அறிவிப்பு

(உடையார்கட்டு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல்தினத்தில் உணவகம், தேநீர்ச்சாலை, குளிர்பானநிலையம் என்பவற்றினை நடாத்துவதற்குத் தற்காலிக அனுமதியைப் பெறுவற்கு கொண்டிருக்கவேண்டிய அடிப்படை ஒழுங்கு முறைகளை தமிழீழ சுகாதாரசேவை முல்லை. மாவட்ட உற்சவ [illegible] பணிமனையினர் வெளியிட்டுள்ள[illegible]

தமிழீ[illegible] சுகாதார சேவையினரால் நாளை மாலை 4.00 மணிக்கு ஆலய முற்றத்தில் நடத்தப்படவிருக்கும் சுகாதார கலந்துரையாடலில் உரிமையாளர், பணியாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளல், தமிழீழ சுகாதார சேவையினரால் வழங்கப்படும் நிகழ்வு நாளுக்குரிய வியாபார நிலையங்களை நடாத்துவதற்கான அனுமதியைப் பெற்று நிலையத்தில் பார்வைக்கு வைத்தல், நிலையம் பெயர் பலகையைக் கொண்டிருந்தால், நிலையம் தூய்மையாகப் பேணப்படல், குடிப்பதற்கும் பிறதேவைக்கும் போதியளவு சுகாதாரமான, பாதுகாப்பாக நீர் வைத்திருத்தல், குளோரின் இடப்பட்ட அல்லது கொதித்தாறிய நீர் துருப்பிடியாத பாத்திரத்தில் வைத்திருக்கப்படல், உணவு பரிமாறும் மேசைகளின் கீழ் கழிவுக் கூடை பாவித்தல், நிலையத்தில் சேரும் மொத்தக்கழிவுகள் மூடியுள்ள கழிவுத் தொட்டியினுள் போடப்பட்டு கிரமமாக இறுதியகற்றல், சீனி,பால்மா, தேயிலை, துருப்பிடியாத பாத்திரத்தினுள் போடப்பட்டிருப்பதுடன், தேநீர் ஊற்றும் தட்டு துருப்பிடியாதபடியும் சுத்தமாகப் பேணப்படல், நிலையத்தினுள் ரொட்டி போடப்படின் ரொட்டி மேசை, ரொட்டிசுடும் தட்டு தூசி புகாதபடி மூடப்பட்டிருத்தல், சமைத்த உணவில் இலையான், தூசி படியாதபடி பொருத்தமான மூடியினால் மூடுதல், நிலையத்திலுள்ள பணியாளர்கள் தொற்று நோய்களால் பாதிக்கப்படாதவர்களாக இருப்பதுடன், தற்சுகாதாரத்தைப்பேணல், கடமை நேரத்தில் புகைத்தல், மதுஅருந்துதல், வெற்றிலை போடல்கூடாது, சிற்றுண்டி வழங்கும் போது நுகர்வோர் கேட்கும் அளவில் வழங்கல், பரிமாறுபவர்கள் இலக்கங்கள் குத்தியிருத்தல், உணவு தயாரித்தல், பரிமாறுதல், சுகாதார முறையில் இருத்தல், காலவதியான, பழுதடைந்த, பதனிழந்த, வண்டுத் தாக்கத்திற்குள்ளான உணவுப் பொருட்கள் நிலையத்தில் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தவிர்த்தல், சர்பத் விற்பனை நிலையங்களில் கொதித்தாறிய குளிர்ந்த நீரில் சர்பத் கலக்கப்படவேண்டும். சர்பத், இனிப்பு விற்பனை நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட உணவு நிறமூட்டிகள் பாவித்தல் என்பவை உற்சவகால சுகாதாரசேவைபணிமனையினரால் வெளியிடப்பட்ட நடைமுறைகளாகும். எனவே இவற்றிற்கு அமைவாக உணவு நிலையங்கள் அமைக்குமாறு உரிமையாளர்களைத் தமிழீழ சுகாதார சேவை முல்லை.மாவட்ட உற்சவகால பணிமனையினர் கேட்டுள்ளனர். (19)

# நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரிகள் ஒலிபெருக்கிகள் பாவிப்பதற்குத் தடை

## -தமிழீழ காவல்துறையினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள், உந்துருளிகளில் நடமாடி ஐஸ்கிறீம் வியாபாரம் செய்பவர்கள் தங்கள் வாகனங்களில் ஒலிபெருக்கி பாவிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென தமிழீழ காவல்துறை வாகன போக்குவரத்துப் பிரிவினர் [illegible]வித்துள்ளனர். அவர்கள் மேலும் [illegible]த்துள்ளதாவது தாங்கள் ஒலிபெருக்கியைப் பாவித்துக் கொண்டு வீதியால் செல்லும் போது பின்னால், முன்னால் வரும் வாகனங்களின் சத்தம் கேட்காது. இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது சிறுவர்கள் விபத்தில் சிக் குண்டு காயப்பட்டு இறந்ததையும் தாங்கள் அறிவீர்கள். எனவே இதனைக் கருத்தில் கொண்டு வீதியால் நடமாடி ஐஸ்கிறீம் விற்கும் வாகனச் சாரதிகள் ஒலிபெருக்கி பாவிப்பதை நிறுத் துமாறு கேட்டுக்கொள்வதுடன், இதனைக் கடைப்பிடிக்காது ஒலி பெருக்கி பாவித்து ஐஸ்கிறீம்விற்கும் விற்பனையாளர்கள், சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ் வறிவித்தல் எல்லா இடங்களிற்கும் பொருத்த மெனவும் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுபபாளர் ப.சி.சிவகுமாரன தெரிவித்துள்ளார். (சோ)

# படையினரின் முட்கம்பி வேலிகளால் கடற்றொழிலாளர் பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டையில் இருந்து துண்டிவரை கடற்கரைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் அமைத்துள்ள முட்கம்பி வேலிகளாலும் மண் அரண்களாலும் கடற்றொழிலாளர் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

பாசையூர் கடற்கரையை அண்டி கோட்டையில் இருந்து துண்டி வரை கடற்கரையோரங்களில் சிறிலங்காப் படையினர் முட்கம்பி வேலி களையும் மண் அணைகளையும் அமைத்துள்ளனர்.

கடலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மீன்பிடி வலைகளை உலர வைப்பதற்கு கடற்கரைச்சாலையையும் கடலோரங்களையும் பயன்படுத்த படையினர். அனுமதிக்காமையால் மீன்பிடி வலைகளை பாசையூர் பிரதான வீதிகளில் உலர வைக்கின்றனர் இது இப்பகுதி மக்களின் சுற்றுச் சூழலுக்கும் சுகாதாரத்திற்கும் பெரும் தீங்கு விளைவிப்ப தாகவுள்ளது.

வலைகளில் இருந்து அகற்றப்படும் கழிவுப்பாசிகள் மூலம் பல்வேறு நோய்த் தொற்றுக்கு மக்கள் இலக்காகி வருவதாக பாசையூர் அபிவிருத்திக் குழு தெரிவித்துள்ளது. (28)

# கொடிகாமம் துயிலுமில்லத்தில் நினைவுக்கற்கள் திரைநீக்கம்

(தென்மராட்சி)

கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் இரண்டு மாவீரர்களின் நினைவுக்கற்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன.

வீரவேங்கை சின்னஆயுர்தன்; இரண்டாம் லெப். கானரசி ஆகியோரின் நினைவுக்கற்களே திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார் நினைவுக்கற்களுக்கான ஈகச்சுடரினை .இவர்களுடைய பெற்றோர் மற்றும் உறவினர்கள் ஏற்றிவைத்தார்கள். மாவீரர் நினைவுரையை கிளிநொச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், போர்ப்பிரியன் நிகழ்த்தினார் சிறப்புரைகளை கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இரத்தினம், மாவீரர் பணிமனையைச் சேர்ந்த இனியவன் ஆகியோர் நிகழ்த்தினர் இந்நிகழ்வில் பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகளும் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (28)

# சிறிலங்காப் பொலிஸ் மீது சீன பெண்வியாபாரி தாக்கு

யாழ். நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் சீனப் பெண்வியாபாரியினால் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ். நகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளே நையப் புடைக்கப்பட்டவராவார்.

யாழ். நகரில் மணிக்கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்த சீனநாட்டு பெண் வியாபாரியை யாழ். நகரில் வியாபாரம் செய்யக்கூடாது எனத் தடுத்த பொலிஸ்கான்ஸ்டபிள் அவ்வியாபாரியைச் சீண்டி அவரைத் தாக்க முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஆத்திரமுற்ற பிரஸ்தாப சீனப் பெண்வியாபாரி கைகளாலும் கால்களாலும் கான்ஸ்டபிளை நையப்புடைத்தார். இதனையடுத்து அங்கு வந்த பொலிசார் பிரஸ்தாப வியாபாரியை சமரசப் படுத்தி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு விசாரித்தபின் விடுதலை செய்ததாகத் தெரியவருகிறது.(33)

# கடற்றொழில் அனுமதியட்டை நடைமுறை; மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

***யாழ். மாவட்டத்தில் மீண்டும் கடற்றொழில் அனுமதியட்டை நடைமுறைகளைப் படைத்தரப்பு அமுல்படுத்த முற்பட்டுள்ள நிலையில் இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பில் விசாரணைகளை நடத்தியுள்ளது.***

குறிப்பாகப் படையினரால் அனுமதியட்டை நடைமுறைகளைக் காரணங்காட்டி கடற்றொழிலுக்கு இடையூறுகள் விளைவிக்கப்படுவதாகக் கூறப்படும் சுழிபுரம் பகுதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரிகள் நேற்று முன்தினம் நேரில் விஜயம் செய்துள்ளனர். அப்பகுதி கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய அவர்கள் கரையோரப்பகுதிகளையும் பார்வையிட்டனர்.

குறிப்பாக சுனாமி கடல் அனர்த்தத்தின் பின்னர் சுழிபுரம் பகுதியில் தற்போது படிப்படியாகக் கடற்றொழில் சுமுகநிலைக்குத் திரும்பி வருகின்றது. அவ்வாறான தோர் சூழலில் படைத்தரப்பின் அனுமதியட்டை நடைமுறைகள் அதனைப்பாதிப்பதுடன். தற்போது பிடிக்கப்படும் மீன்களைக் கரையோரத்தில்இருந்து எடுத்துக் செல்ல வாகனங்கள் எவற்றையும் கொண்டு செல்லக்கூட அனுமதிப் பதில்லையென கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகள் சுட்டிக்கட்டியுள்ளனர்.

இதனிடையே கடற்படையினரின முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள மண்டைத்தீவுப்பகுதியின் மேலும் சில பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். ஏற்கனவே ஒரு பகுதி கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு சிறு பகுதி மட்டுமே கடற்றொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பகுதியை மட்டுப்படுத்த கடற்படை முற்பட்டுள்ளதாக அங்கு குடியமர்ந்துள்ள குடும்பங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் புகார் செய்துள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களை அடுத்து இடம் பெயர்ந்த மண்டைதீவுப்பகுதி மக்கள் அண்மைக்காலப் பகுதியிலேயே மீளக்குடியமர அனுமதிக் கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது (27)

# விண்ணப்பம் கோரல்

சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உளவியல், சமூகவியல், குற்ற வியல், குற்றங்கள், நியாயங்கள் தொடர்பான பாடங்களில் சிறப்புப்பட்டம் பெற்றோர் அல்லது சமூகவியல் பாடம் உள்ளடங் கலாகப் பொதுப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருப் போராகவும் 18 தொடக்கம் 45 வயதுக்குட் பட்டவர்களாகவும் இருப்போர் இதற்கு விண்ணப் பிக்கத் தகுதியுடைய வர்களாவர்.

விண்ணப்பிக்க விரும்புவோர்.

ஆணையாளர், சிறுவர் நன்நடத்தைச் சேவைகள் திணைக்களம், 150 ஏ.எல். எச்.பி கட்டடம், நாவல வீதி, நுகேகொடஎனும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப் பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# தாய் சேய் நல நிலையங்களில் சிகிச்சையளிக்கும் போது அரசவைத்திய அதிகாரி கண்காணிக்க வேண்டும்

## பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தாய் சேய் நலச் சிகிச்சை நிலையங்களில் கர்ப்பவதிகளுக்கு சிகிச்சையளிக்கும் போது அருகிலுள்ள அரசாங்கவைத்திய சாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் சிகிச்சைகளைக் கண்காணிப்பது அவசியம்.

இவ்வாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நிலவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக உரிய தகைமை உள்ள வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்புகள் எதுவும் இன்றி தாய் சேய் நலச் சிகிச்சை நிலையங்களில் வைத்து கர்ப்பிணிகளுக்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

எனினும் இம்முறை தாய்க்கும் சேய்க்கும் பாதிப்புக்களை விளைவிக்கக்கூடிய அபாயகரமானதொன்றாக இருக்கின்றது..

எனவே ஒருதாய் சேய் நல சிகிச்சை நிலையத்தில் வைத்து கர்ப்பிணியொருவருக்கு சிகிச்சையளிக்கும்போது அச்சிகிச்சை நிலையத்துக்கருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையின் தகுதிபெற்ற வைத்தியஅதிகாரிகளின் கண்காணிப்பு அவசியமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

# சுகாதார ஊழியர்கள் சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை அண்டிய பகுதிகளில் சுகாதார சேவை ஊழியர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதி மாகாண சகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தலைமையிலான குழுவினர் மே.16 ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரையான டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு தமது பணிமனையை அண்டியபகுதிகளில் சிரமதானப்பணிகளை மேற்கொண்டனர். (சு)

# வலிகாமம் மேற்குப் பகுதியில் 70 வீடுகள் அமைப்பு

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 70 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இப்பகுதியில் மிகவும் பின்தங்கியுள்ள செம்மணத்தி, ஊரத்தி முன்கோட்டை, மூளாய் ஆகிய கிராமங்களிலேயே இவ் 70 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இக்கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நலன் கருதியே இவ் வீடுகள் அமைக்கப்படுகின்றன. (33)

# தொடர் திருட்டுக்களால் பொதுமக்கள் அச்சம்

கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாசையூர் பகுதிகளில் தொடரும் திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சம் அடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இப்பகுதிகளில் உள்ள ஏழு வீடுகளில்கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கின்றன. சம்பவங்களில் யன்னல் கம்பிகளை வளைத்தே கொள்ளையர்கள் பல இலட்சம் ரூபா பணத்தையும், நகையையும், பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் இச்சம்பவங்கள் அனைத்தும் ஒரே வகையில் நடைபெற்று உள்ளதால் இதில் குழு ஒன்றே தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# சத்திர சிகிச்சை

அண்ணப்பிளவு, உதட்டுப் பிளவு, போன்றகுறைபாட்டு நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கான விசேட சத்திர சிகிச்சை இன்றும், நாளையும் யாழ் போதனாவைத்திய சாலையில் இடம்பெறவுள்ளன.

யாழ். குடாநாட்டு மக்களுக்கென இச்சத்திரசிகிச்சைச் சேவைகளை வழங்கவென தென்னிலங்கையிலிருந்து விசேட வைத்தியநிபுணர்கள் குழுவொன்று வருகை தந்துள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட நோயாளர்களைப் பங்குபற்றிப் பயனடையுமாறு கோரப்பட்டுள்ளது. (33)

# கதிரிப்பாய் கிராமத்திற்கு அடிப்படைவசதி செய்யக் கோரிக்கை

அச்சுவேலி கதிரிப்பாய்க் கிராமத்திற்கு அடிப்படை வசதிகளைச் செய்துதரவேண்டுமென பொதுமக்கள் கோரியுள்ளனர்.

மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட இக் கிராமத்திற்கு அடிப்படையாக உள்ள பிரச்சினைகளை உடனடியாக இனங் கண்டு தீர்வுகாண வேண்டும் என இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடிப்படை பிரச்சினையாக உள்ள மலசலகூடம், சாலைவசதிகள், மருத்துவசிகிச்சை மையம்,மின்சாரவசதி என்பவற்றை நுகர முடியாத மக்களாக வாழும் இம்மக்கள் தமக்கு இத்தேவைகளை நிறைவு செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

# நிர்வாக சபைத் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

வில்லூன்றி இந்து மாயானத்திற்கான நிர்வாக சபை ஒன்றைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. மூன்று மணிக்கு கொட்டடிநமசிவாயம் மகாவித்தியாலயத்தில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த மாயனத்தினுடைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இவ்வாறான நிர்வாகக்குழு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆதலால், இம்மயானத்தில் தகனக் கிரியைகளை மேற்கொள்கின்ற பிரதேசமக்கள் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# ஆய்வு நடவடிக்கை

சிறுவர்பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் அறவழிப் போராட்டக்குழு யாழ். தென்மராட்சியிலுள்ள சந்திரபுரம் மற்றும் சரசாலை ஆகிய இடங்களில் சிறுவர் உரிமைகள் பற்றிய ஆய்வுகளை நடத்தி வருகின்றது.

பன்னிரெண்டுபேர் அடங்கிய குழுவே இவ் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. (33)

யாழ்ப்பாணம்



# தமிழீழ விடுதலைப் போராட்ட ஓவியங்கள்தான் என் சமூகப் பார்வைக்கு வித்திட்டன

**தமிழக ஓவியக் கல்லூரிப் பேராசிரியர் புகழேந்தியுடனான நேர்காணல்**

இ.சசிக்குமார்

**தமிழீழ மக்கள் வடித்த கண்ணீரை சிங்கள இனவெறியர்களின் குண்டுகளால் வீழ்த்தப்பட்ட தமிழன் உடலை இந்த மண்ணில் வெடித்த நெருப்பை ஓவியங்களாய்த்தந்த பெருமைக் குரியவர் தமிழக ஓவியர் புகழேந்தியவர்கள்.**



அவர் தனது ஓவியங்களைத் தமிழீழ மண்ணில்அண்மைக்காலமாகக்காட்சிப்படுத்தி வருகிறார்.

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகசமூகப் பார்வையோடு ஓவியப்பணியை ஆற்றிவரும் ஓவியர் புகழேந்தி தஞ்சை மாவட்ட தும்பத்திக் கோட்டையில் பிறந்தவர். குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப்படிப்பையும் ஹைதரா பாத் மத்திய பல்கலைக்கழகத்தில் முது கலைப் பட்டப்படிப்பையும் முடித்துள்ளார். 1987ஆம் ஆண்டு கொல்கத்தாவில் இளைஞர் களுக்கான தேசிய விருது எம்.எஃப் உசேன் அவர்களால் தேர்வு செய்யப்பட்டது. அதே ஆண்டு தமிழ்நாடு மாநில விருதையும் தருமபுரி மனிதவள மேம்பாட்டுமையம் வழங்கிய சிறந்த ஓவியர் விருதையும் பெற்றவரைச் சந்தித்து அவரது ஓவியத்துறையின் ஈடுபாடு பற்றியும் தமிழீழ விடுதலைப் போரின்பால் இவர் கொண்ட பற்று பற்றியும் கேட்டோம். அத்துடன் ஓவியத் துறையில் அவருக்கு எப்பொழுது ஆர்வம் ஏற்பட்டது என்பது குறித்தும் தெரிவித்தார்.

*********

நான் ஒரு கிராமப் பகுதியிலே பிறந்து வளர்ந்தவன். சிறுவயதிலிருந்தே ஓவியக் கலையில் ஆர்வமுடையவன். அன்று எனக்கு கரிக்கோடுகள் தான் மிகவும் துணையாயிருந்தன. விளக்குக் கம்பங்களிலே கரிக் கோட்டு ஓவியங்களை வரைந்துள்ளேன். அதன்பிறகு பச்சிலைகளால் சுவர்களில் ஓவியங்களை வரைந்து மகிழ்ந்தேன். அதன்பின் வரலாற்று நூல்களில் ஆங்கில பிரபுக்களின் ஓவியங்கள் என்னை ஈர்த்தன. அவற்றைப் பார்த்து வரைய ஆரம்பித்தேன். பின்னர் பாடசாலைகளில் என் சார்ந்த மாணவர்கள் எனக்குக் கூடிய ஊக்கம் வழங்கினார்கள். ஆசிரியர்களும் என்னை ஊக்குவித்தார்கள். நான் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு கல்லூரிப் படிப்பிற்குச் செல்லும் போது என்தந்தை நான் மருத்துவராக வேண்டும் என்று நினைத்தார். ஆனால் நான் அதற்கு உடன்படவில்லை. ஓவியத்துறைக்குத் தான் செல்லவேண்டும் என்று முடிவுசெய்து விட்டேன். ஆனால் இதற்கு அவர் தடையாக இல்லை. எதிர்ப்பு சிறிது இருந்தது. ஆனால் முற்றாகத் தடைபோடும் அளவுக்கு இருக்க வில்லை.

*** தமிழீழ விடுதலைப் போராட்டத் தின்பால் நீங்கள் ஈடுபாடு கொள்வதற்குத் தூண்டுதலாக அமைந்த காரணி என்ன?**

1983ஆம் ஆண்டு எனது பள்ளிப் பருவத்தை முடித்துக்கொண்டு ஓவியக் கல்லூரி மாணவனாக ஆகஸ்ட் மாதம் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரிய வன்முறையான யூலை இனக் கலவரம் நிகழ்ந்தது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். பெண்கள் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டு கொடுமைப்படுத் தப்பட்டார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் தான் நான் கல்லூரியில் இணைகின்றேன். அந்தக் காலப்பகுதியில் தான் கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் எல்லோரும் இணைந்து தமிழகம் முழுவதும் ஈழத்தமிழருக்கு நிகழ்த் தப்படும் கொடுமைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் , போராட்டங்களை நடாத்தத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் போராட்டங்கள் நடைபெற்றன. [illegible] என்னை இந்தப் போராட்டத்தின் பால் ஈடுபடத் தூண்டியது. நானும் அந்தப் போராட்டங்களில் இணைந்து விட்டேன். ஏற்கனவே எனக்கு தமிழ் அறிவும், மொழி உணர்வும் அதிகமாக உண்டு. ஏனென்றால் நான் திராவிட இயக்க பாரம்பரியத்தையுடைய குடும்பத்தில் பிறந்தவன். அந்த அடிப்படையில் என்னுள் மொழி இன உணர்வுகள் இருந்ததால் என்னால் அந்தப் போராட்டத்தில் இணைய முடிந்தது. ஒரு ஓவிய மாணவனாக இந்தப் போராட்டத்திற்கு என்னுடைய பங்களிப்பு என்னவாக இருக்கும் என்று நான் யோசித்தேன். நான் ஒரு சராசரியான நல்ல பணம் சம்பாதித்து வாழ்க்கையை ஓட்டக் கூடிய ஒரு எதிர்பார்ப்போடுதான் கல்லூரிக்குள் நுழைந்தேன். ஓவியப் பிரிவில் பல பிரிவுகள் இருந்தன. நான் விளம்பரப் பிரிவைத் தேர்ந்தெடுத்து தான் அங்கு சென்றேன். ஆனால் அந்தக் காலத்திலேயே இவ்வாறு போராட்டங்கள் நடைபெற்றதால் அப்போராட்டத்தில் நானும் இணைந்த போதுதான் நான் ஒரு வண்ண ஓவியனாக மாறி இந்தப் போராட்டம் சார்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் ஓவியங்களூடாகவும் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் என்னுள் தோன்றியது. பல்வேறு ஓவியங்கள் 1983 படுகொலையைப் பற்றி 1984, 1985 காலகட்டங்களில் நிறையப் ஓவியங்களைச் செய்தேன். நிறையப் போராளிக்குழுக்கள் தமிழகத்திலேயே இருந்த காலகட்டமது. பத்திரிகைச் செய்திகள், ஒளிப்படக் காட்சிகள், புகைப் படங்கள் என்று பல்வேறு வகையிலும் அறிந்த சம்பவங்களை ஓவியங்களாக வடித்து மக்கள் மத்தியில் விளக்கினோம். இவ்வாறு தான் இந்த ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய ஓவியங்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்வு எனக்கு வந்தது.

*** ஆரம்பத்தில் இந்த ஓவியங்களை மக்கள் மத்தியில் எவ்வாறு வெளிப் படுத்தினீர்கள்?**

முதலில் தமிழகத்தில் தான் காட்சிக்கு வைத்தோம். ஏனெனில் அப்போது தமிழகத்தில் இந்தப் பிரச்சினையைப் பல்வேறு அரசியல் கட்சிகள் பேசின. பேசாத அரசியல் கட்சிகளே கிடையாது. பேசாத அமைப்புக்களும் கிடையாது. அந்தளவுக்கு அந்த அமைப்புக்கள் இயங்கின. கட்சிகள் இயங்கின. அந்தக் கால கட்டத்தில் தான் நானும் பல ஓவியங்களைப் படைத்து என்னுடைய பங்கிற்கு நானும் கண்காட்சியாக தென்னிந்திய அளவில் இந்த ஓவியக் கண்காட்சியை நடத்தியிருக்கிறேன். பின்னர் பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்தப் பிரச்சினையை பேசுவதற்குத் தயங்கிய பொழுதும் இதிலிருந்து பின்வாங்கிய பொழுதும் நான் இன்னும் பல்வேறு ஓவியங்களைச் செய்து மக்கள் மத்தியில் கண்காட்சியாக நடத்தி அவர்கள் மத்தியிலே இந்தப் பிரச்சினையை மேலும் கொண்டு சென்றேன். இவ்வாறு தான் எனது செயற்பாடு விரிவுபட்டது.

*** தமிழகத்தில் கிராமரீதியாகவா நகர ரீதியாகவா இக் கண்காட்சிகளை நடாத் தினீர்கள்?**

அனைத்துப் பகுதிகளிலும் அதாவது கிராமம், சிறுநகரங்கள், மாவட்டத்தலை நகரங்கள் பெரும் நகரங்கள் என்று பல்வேறு இடங்களிலுமே இவைகாட்சிக்கு வைக் கப்பட்டன.

*** அந்தக் காலகட்டத்தில் உங்களது இவ்வாறான ஓவியங்கள், மக்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற் படுத்தின.?**

இந்தப் பிரச்சினையை அந்த மக்கள் தெரிந்து கொள்வதற்கான ஒருவாய்ப்பாக இந்த ஓவியங்கள் இருந்தன. குறிப்பாக பெண் களுடைய மார்பகங்கள் அறுக்கப்பட்டு சிங்களக் காடையர்களால் காட்சிப்படுத்தப்பட்ட அந்த நிலையை நான் ஓவியமாக செய்தபொழுது அதைப் பார்த்த பெண்கள் பலரும் அழுதார்கள். மிகப்பெரிய அளவில் இந்த உணர்வுகளை உள்வாங்கிக் கொள்வதற்கு இங்கு நடக்கின்ற கொடுமைகளை, படுகொலைகளை அந்த மக்கள் புரிந்து கொள்வதற்கான ஓர் ஊடகமாக இந்த ஓவியங்கள் இருந்தன. பல்வேறு தரப்பு மக்களும் இந்த ஓவியத்தைப் புரிந்து கொண்டார்கள். பெரியவர்கள், குழந்தைகள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற அனைத்துத் தரப்பினருமே இந்தப்பிரச்சினைகளை ஓவியத்தினூடாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

***. நீங்கள் ஈழத்தமிழர்களின் போராட்ட ஓவியங்களோடு வேறு எவ்வகையான ஓவியங்களை உருவாக்கியுள்ளீர்கள்?**

நிறைய ஓவியங்களை உருவாக்கியுள்ளேன்.



ஆனால் ஈழவிடுதலைப் போராட்ட ஓவியங்கள் தான் எனது சமூகப்பார்வைக்கு வித்திட்டது. அதன் பிறகு உலகம் முழுவதும் நடக்கின்ற அடக்கு முறைகளை எதிர்த்து விடுதலைக்காக போராடுகின்ற இயக்கங்களுக்கு ஆதரவாக அந்த மக்களுக்காதரவாக குரல் கொடுக்கின்ற அதாவது ஓவியங்களினூடாகவும் குரல் கொடுக்கின்ற நிறைய ஓவியங்களை உருவாக்கியது ஈழ விடுதலைப் போராட்டத்தால் தான். அது தான் உண்மை. அதன் பிறகு தமிழகத்தில் இருக்கின்ற சாதி ஒடுக்குமுறையை எதிர்த்து ஓவியங்களை செய்யமுனைந்தேன். அதனை எதிர்த்துப் போராடவும் தூண்டப்பட்டேன். அதேபோல் மதத்தின் பேரால் நடக்கின்ற கொடுமைகளை, அடக்குமுறைகளை கொலைகளை மக்கள் மத்தியிலே அம்பலப்படுத்துவதற்கு எனது ஓவியங்கள் இன்று பணி செய்கின்றன. அதே போல் அங்கு இருக்கின்ற வர்க்க வேறுபாடுகளை பெண்ணியவெளிப்பாடுகளை பெண்களுக் கெதிராக நடக்கக் கூடிய வன்முறைகளை, அரச வன்முறைகளாகவிருந்தாலும் சரி தனி நபர்கள் செய்கின்ற வன்முறைகளாக விருந்தாலும் சரி அதனையும் வெளிப்படுத்தும் வகையில் என்னுடைய ஓவியங்கள் வெளிவந்தன. அதேபோல் உலக ரீதியில் நடைபெறுகின்ற விடுதலைப் போராட்டங்களை குறிப்பாக தென்னாபிரிக்காவில் நடைபெற்ற விடுதலைப்போராட்டத்தை ஆதரித்து யசீர் அரபாத்தினுடைய பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து குர்திஸ்தான் மக்களின் விடுதலைப்போராட்டத்தை ஆதரித்து இவ்வாறு பல்வேறு இடங்களிலும் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற மக்களினுடைய விடிவிற்காகவென்று எனது ஓவியங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. உலக அளவில் மக்களின் ஒடுக்குமுறைகளுக்கெதிராகக் குரல் கொடுக்கின்ற ஒருவனாகவும் நான் இன்று உள்ளேன்.

***. ஓவியங்கள் படைப்பதற்காக பல் வேறு விடுதலைப்போராட்டங்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள் அப்போராட்டங்களி லிருந்து ஈழ விடுதலைப்போர் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பல்வேறு வகையான போராட்டங்கள், தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளையின ஆட்சியாளருக்கெதிரான கறுப்பின மக்களின் போராட்டம், பலஸ்தீனப் போராட்டம், கியூபா போராட்டம் இவை எல்லாமே அந்தந்த மக்களின் உரிமைகளுக்காகவே நடத்தி யிருக்கின்றார்கள்.



அதேபோல் தான் ஈழத்திலும் தமிழ் மக்களுடைய உரிமைகள் தமது மண்ணினுடைய மீட்புக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லாவகையான போராட்டங்களும் ஒத்த சிந்தனையோடுதான் நடைபெறுகின்றன. எனவே விடுதலைப் போராட்டம் என்ற ரீதியில் இவையனைத்தும் ஒன்றுதான். ஆனால் வேறு சிலர் ஏனைய போராட்டங்களோடு ஈழ விடுதலைப் போரை வேறுபடுத்திப்பார்க்கின்றார்கள் எனக்கு அதில் வேறுபாடு தெரியவில்லை.

***. நீங்கள் இந்த விடுதலைப் போராட்டங்கள் நடைபெறாத இடங்களில் இவ் ஓவியங்களை காட்சிப்படுத்தியிருக் கிறீர்கள் அங்கு இவ் ஓவியங்களைப் பற்றி எவ்வாறான கருத்துக்கள் வெளி வருகின்றன?**

பெரும்பாலும் தமிழர்கள் அல்லாதவர்கள் இந்த ஓவியங்களைப் பார்க்கின்ற பொழுது ஓவிய நுட்பத்தையும் ஓவியத்தினுடைய கருத்தையும் உள்வாங்கிக் கொள்கிறார்கள். பெரிய அளவில் அந்த மக்கள் இந்த பிரச்சினைகளைப் புரிந்து கொண்டுள்ளார்கள். அது இந்த ஓவியத்திற்குக் கிடைத்த வெற்றியாகவேநான் பார்க்கின்றேன். ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பாக மலேசியாவில் இந்த ஓவியங்களை மக்கள் கூடும் இடங்களில் காட்சிப்படுத்தியபோது பல்லின மக்கள் அக் கண்காட்சியைப் பார்த்தார்கள். பார்த்து இப்படியும் கொடுமைகள் சித்திரவதைகள் தமிழ் மக்களுக்கு நடந்ததா? என்று அவர்கள் வியப்புத் தெரிவித்தார்கள். அப்படி பல்வேறு நிலைகளிலும் இந்த ஓவியங்கள் சென்றடைந்திருக்கின்றன. அதேபோல் இன்று இளம் தலைமுறையினராக இருக்கும் தமிழர்கள் பலரும் புலம் பெயர்ந்த நாடுகளில் இந்தப் பிரச்சினைகளின் ஆழம் தெரியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். அவர்களுக்கு இது ஒரு மிக முக்கியமான வரலாற்றுப் பதிவாக இருந்து வரலாற்றை புரிந்து கொள்ள உதவியது 1983 இல் நடைபெற்ற பல்வேறு படுகொலைகளைப் பற்றி அவர்கள் படித்திருக்கிறார்கள். நூல்களும் அவர்களிடம் இருக்கின்றன. ஆனால் ஓவியமாக அவர்களிடம் இல்லை. இது ஒரு ஊடகமாக இருந்து அவர்களுக்கு அதைப்புரிய வைக்கிறது. அதேபோல் ஒவ்வொரு நிகழ்வும் யாழ். புலம் பெயர்வு, திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நிகழ்வு செம்மணிப் படுகொலைகள் இப்படிப் பல்வேறு ஓவியங்களும் அவர்களைச் சிந்திக்கத்தூண்டுகிறது. கடந்தகால சம்பவங்களை உணரவைப்பதன் மூலம் எதிர் காலத்தைப் பற்றிய சிந்தனையை தூண்டுவதாக அமைகிறது.

***. ஈழத் தமிழர்களின் போராட்டங்களை சித்திரிக்கின்ற ஓவியங்களை இந்தியாவில் காட்சிப்படுத்துகின்றபோது அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்களைச் சந்தித்திருக்கிறீர்களா?**

பொதுவாக எல்லா விடயங்களுக்கும் எதிர்ப்புக்களும் இருக்கும். ஆதரவுகளும் இருக்கும் ஈழத்தமிழர்களுக்கு ஒரு காலத்திலே தமிழகத்தில் அனைத்து தரப்புக்களினதும் ஆதரவும் இருந்தது. சில கால கட்டங்களுக்குப் பிறகு அரசியலுக்காக எதிர்த்தார்கள். அதை ஒட்டித்தான் இந்த ஓவியங்களையும் எம்மையும் எதிர்க்கக் கூடிய நிலைகள் உருவாகின்றன. எதிர்ப்பதனால் நாம் துவண்டு விடப்போவதில்லை.

7ஆம் பக்கம் பார்க்கவும்

# அமேசன் காடுகளைஅழித்து சோயாபயிரிடுகை சுற்றுப்புறச் சூழலுக்கு பெரும் ஆபத்து

உலகின் மிக அடர்ந்த காடாகிய அமேசன் காட்டின் ஐந்திலொரு பங்கு இதுவரை அழிக்கப்பட்டு சோயாபயிரிடப்படுகிறது. இவ்வாறு ஆபத்தான



வேகத்தில் இக்காடு அழிக்கப்படுவது உலகச் சுற்றுப் புறச் சூழலுக்கு ஆபத்தானது என வலியுறுத்தப் படுகிறது.

உலகின் மிக அடர்ந்தகாடு என்று வருணிக் கப்படுவது அமேசன் காடு. இது பிரேசிலில் அமைந் துள்ளது. கடந்த 12மாதங்களில் மட்டும் 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு அமேசன் காடுஅழிந்து விட்டது.இது இதற்கு முந்திய 12 மாதங்களில் ஏற்பட்ட அழிவை விட 6 சதவீதம் அதிகம். 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் என்பது அமேசன் மொத்தக் காட்டுப் பகுதியில் 5இல் 1 பங்கு ஆகும். இந்த 26 ஆயிரம் சதுரகிலோ மீற்றரில் பாதி அளவு மட்டுடா கிராசோ என்ற ஒரே மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது. இங்கு காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு சோயா பயிரிடப்பட்டு ள்ளது. சீனா, ஐரோப்பாவுக்கு இங்கிருந்து சோயா ஏற்றுமதி ஆகிறது.ஆனால் ஏற்றுமதியை விட மிக முக்கியம் வனப் பாதுகாப்பு மூலம் சுற்றுச்சூழலை காப்பதுதான். அது தலையாய கடமை என்று சுற்றுப் புறசூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# வதந்தியால் நடுநடுங்கும் இகோனான்சோ நகரம்

கொலம்பியாவிலுள்ள நகர மொன்றில் அடிக்கடி பரவும் வதந்தி களால் அங்குள்ள மக்கள் அச்சத் துடன் வாழ்கின்றனர்.

கொலம்பியா தலைநகர் பகோட் டாவில் இருந்து 40 மைல் தென் மேற்கில் உள்ளது இகோனான்சோ நகரம். இங்கு 11 ஆயிரத்து 500 பேர் வாழ்கின்றனர். வதந்திகள் காரண மாக இங்கு அடிக்கடி பல இடை யூறுகள் ஏற்பட்டு வந்தன.ஒருமுறை ஆயுதம் தாங்கிய வன்முறை யாளர்கள் இந்த நகரை தாக்க வந்து கொண்டிருப்பதாக வதந்திபரவியது. இதனால் அனைத்து அலுவலகங் கள், பள்ளிகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் வீட்டுக்குள் அடைபட்டு கிடந்தனர். ஆனால்அப்படி எதுவும் நடக்கவில்லை. இன்னொரு முறை ஒரு குறிப்பிட்ட நபர் தீவிர வாதக்கும்பலை சேர்ந்தவர் என பொய்யான தகவல் பரவியது. இதில் அவர் கொல்லப்பட்டார். அதுபோல வேறு சிலர் மீது இப்படி பொய்க்குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். இதைத் தடுக்க இப்போது அந்த நகரில் ஒரு சட்டம் போடப் பட்டுள்ளது. யாராவது வதந்தியை பரப்புவது கண்டு பிடிக்கப்பட்டால் இந்தச் சட்டப் படி நான்கு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அல்லது ரூ.60 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

# ஆபத்தான எரிமலையின் அடிவாரத்தில் வாழும் மக்கள்

உலகின் மூன்றாவது ஆபத்தான எரிமலை என மவுண்டெய்னியர் வர்ணிக் கப்படுகிறது. எனினும் சிலர் இதுதான் முதலாவது ஆபத் தான எரிமலை என்றும் கூறுகின்றனர்.

உலகிலேயே மிக அதிகம் ஆபத்து நிறைந்த எரி மலையாகக் கருதப்படுவது அமெரிக்காவின் ஹவாய்த் தீவில் பிக்அய்லன்ட் பகுதியில் உள்ள கைலியு என்ற எரிமலையாகும். அடுத்த இரண்டாம் நிலை பெற்ற எரிமலை செயிண்ட் ஹெலன்ஸ் ஆகும். மூன்றாவது ஆபத்து நிறைந்த எரி மலையென வர்ணிக்கப்படுவது மவுண்றெய்னியர் சிலர் இதுதான் மிகவும் ஆபத்தான எரிமலை என்றும் கூறி வருகின்றனர். ஏனெனில் 30 இலட்சம் மக்கள் இதனருகே உள்ள சீட்டில்- டக்கோமா - பெல்லிவூ என்ற வளர்ச்சிய டைந்த நகரில் வாழுகின்றனர். ஒரு இலட்சம்பேர் அதன் நெருங்கிய பகுதியில் உள்ளனர். அதன் அடி வாரப்பகுதியை ஒட்டியுள்ள ஆட்டிங் நகரில் 4500 பேர் வாழ்கின்றனர். இப் போது முதல் 200 ஆண்டுகளில் எப்போது வேண்டுமானாலும் இந்த எரிமலை வெடிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

# செவ்வாய் மணலில் சிக்கியுள்ள விண்கலத்தை மீட்பதற்கு முயற்சி



செவ்வாய்க் கிரக மணலில் சிக்கியுள்ள ஒப்பசூனிட்டி எனும் விண்கலத்தை மீட்கும் முயற்சியில் நாசா விஞ்ஞா னிகள் ஈடுபட்டுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தை ஆராய 2003 டிசம்பரிலும் 2004 சனவரியிலும் இரண்டு விண்கலங்களை அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா அனுப்பியது. அவை வெற்றிகரமாக செவ்வாய் மண்ணில் ஆராய்ச்சி செய்து வருகின்றன. ஸ்பிரிட் ஒப்ப சூனிட்டி என்றவிண் கலங்கள் அவை. இதில் ஒப்ப சூனிட்டி விண்கலம் இப்போது 1அடி உயரம் 8அடி அகலம் உள்ள மிருதுவான மணல் திட்டின் மீது நின்று கொண்டு இருக்கின்றது. இந்தத் திட்டில் இருந்து விடுபட அது முயன்று வருகிறது. ஆனால் மணலில் சிக்கிக் கொள்ளும் அபாயமுள்ளது. அவ்வாறு நிகழாமல் தடுக்க பூமியில் இருந்தபடி விஞ்ஞானிகள் அதற்கு கட்டளைகளை பிறப்பித்தபடிஉள்ளனர். இதற்காக பூமியில் நாசா பரிசோதனைக் கூடத்தில் செயற்கையாக மணல்த் திட்டு உருவாக்கப்பட்டு அதில் விண்கல வடிவ ரோபோவை கட்டளைப்படி நகரச்செய்யும் சோதனையில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதன் அடிப்படையில் செவ்வாய்க் கிரக விண்கலத்துக்கு கட்டளை பிறப்பிப்பார்கள்.

**தமிழீழ விடுதலை......**

***. இவ் ஓவியங்களை ஈழத்திலே காட்சிப்படுத்த இவ்வளவு காலமும் இடங்கல்கள் ஏதும் இருந்தனவா?**

பொதுவாக எனது ஓவியங்கள் எந்த மக்களை பற்றிப் பேசுகிறதோ அந்த இடத்திலே அவ் ஓவியங்களைக் காட்சிப்படுத்த வேண்டும் என்று நான் கருதுவதுண்டு . அது தான் என்னுடைய நோக்கமாகவும் இருந்தது. அதேபோல் யார் அந்த மக்களை அடக்கு கிறார்களோ அவர்கள் பக்கமும் இந்த ஓவியங்களைக் கொண்டு செல்லவேண்டுமென்று கருதுகின்றவன். அப்படிதான் இந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக எனது செயற்பாடுகள் இருந்து வருகின்றது. அப்படி பல்வேறு ஓவியக் காட்சிகளை அந்த மக்களிடத்திலே நான் நடத்தியிருக்கின்றேன். அதற்கு பல்வேறு இலக்கிய, சமூகமுற்போக்கு அமைப்புக்கள், தமிழ்தேசிய அமைப்புக்கள் என்னோடு உடனிருந்து உதவிகளையும் ஆதரவையும் இன்றைக்கும் வழங்கிவருகின்றன.

தமிழக அளவிலும் சரி, உலக அளவிலும் சரி அவ்வாறன அமைப்புக்கள்தான் இக் கண்காட்சியை நடத்த உதவிவருகின்றன. அப்படி ஈழத்திலே நடாத்துவதற்கான ஒரு சூழல் இது வரை இருக்கவில்லை பல்வேறு வகையான போராட்ட காலத்தில் போர் முனையில் இந்தக் கண்காட்சியை நடத்துவது இது வரைக்கும் சாத்தியப்படவில்லை இப்பொழுது அதற்கான சூழல் உருவாகி இந்த இடத்தில் அக்கண்காட்சி நடைபெறுகிறதென்றால் என்னுடைய நோக்கம் நிறைவேறுவதாகவே நான் கருதுகின்றேன். எனக்கு ஒரு படைப்பு ரீதியான திருப்தியும் ஏற்படுகின்றது.

***அடக்கு முறையார்களின் பகுதி களுக்குள் இக் கண்காட்சியை நடாத் துவது தொடர்பான திட்டம் ஏதும் உண்டா?**

நடாத்துவதற்கு எனக்கு விருப்பம் இருக் கிறது ஆனால் அதை நடாத்த ஒரு அமைப்பு தேவை. எந்த ஒரு செயலையும் ஒரு தனி மனிதனால் செய்ய முடியாது. எனக்கு அதில் நம்பிக்கையும் இல்லை. நான் எந்த ஒரு அமை ப்பிலும் அங்கம் வகிக்காவிடினும் நான் அமைப்புசார்ந்து மக்கள் சார்ந்து தான் இயங்கிக் கொண்டிருக்கிறேன். எனது ஓவியங்களை உலகிற்கு கொண்டு செல்லக் கூடியவகையில் இன்று பல்வேறு அமைப்புக்கள் இருக் கின்றன.ஒரு மக்களுடைய பிரச்சினைகளை பேசுகின்ற ஒரு படைப்புக்கு பல்வேறு தரப் பினரதும் ஆதரவு இருந்தால்தான் அதை நாம் கொண்டு செல்ல முடியும். மாறாக ஒரு கலை, கலைக்காகவே என்ற கோட்பாடுள்ள எந்தப் படைப்பிற்கும் பிரச்சினைகள் இருப்பது கிடையாது. ஆகவே இந்த ஓவியக் கண் காட்சியை சிங்களவர்கள் வாழ்கின்ற பகுதி யிலும் நடாத்த வேண்டும் என்ற ஒரு விருப்பம் எனக்கு இருக்கிறது. அதை நடாத்துவதற் கான ஒரு அமைப்பு தான் தேவைப்படுகிறது.

*** இங்கு சம்பவம் நடந்த மண்ணில் இவ் ஓவியங்களை பார்வையிட வருகின்ற பார்வையாளர்கள் எவ்வாறான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள்.?**

வயதானவர்கள் கண்ணீர்சிந்துகிறார்கள் ஏனென்றால் 1983 இற்கு முன்பிருந்து அவர் கள் அனுபவித்தவர்கள். அதனால் அழுது பதற்ற நிலையை அடைகிறார்கள். நடுவயதை சேர்ந்தவர்கள் இவற்றைப் பார்த்து விட்டு அழுத்தமுடையவர்களாக தோற்ற மளிக்கிறார்கள். இளம் தலைமுறையினர் அவர்கள் கேள்விப்பட்டுக் கொண்டிருந் தவைகளை எல்லாம் இவ்வாறு காட்சிப்படுத் தப்படுகின்ற போது ஒரு வரலாற்றைப் புரிந்து கொண்டவர்களாக உள்ளார்கள். இவ்வாறு அனைத்து தரப்பினருக்கும் இவை பயனுடையதாகவே இருக்கின்றது. ஒரு சிலர் இன்னும் பல்வேறு நிகழ்வுகள் எங்கள் மண்ணில் நடைபெற்றிருக்கின்றன அவற் றையும் ஓவியமாக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் கோரிக்கைகளையும் விடு கிறார்கள். உண்மைதான். நான் தமிழகத்தில் இருந்து தமிழீழத்தை பார்க்கிறவன். தமிழீழத்தில் இருந்து தமிழகத்தைப் பார்ப்பது என்பது வேறு .தமிழகத்தில் இருந்து தமிழீழத் தைப் பார்ப்பது என்பது வேறு இரண்டுக்குமான வேறுபாட்டை நான் உணர்கிறேன். தமிழீழத் துக்கு வந்த பிறகு தான் நான் அறியாத பல நிகழ்வுகளை கேட்கக் கூடியதாகவும் பார்க்கக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த அனு பவங்கள் என்னுடைய படைப்பிற்கு மேலும் துணை செய்யும் என நான் உணர்கிறேன்.

*** நீங்கள் தமிழீழத்தின் போர் நடந்த பகுதிகளையும் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளையும் நேரில் சென்று பார்வை யிட்டுள்ளீர்கள் இவற்றை ஓவியங் களாக்கும் எண்ணம் உண்டா?**

நிச்சயமாக செய்ய வேண்டும் மென்ற எண்ணம் எனக்கு நீண்ட நாட்களாகவே இருக் கின்றது. பொதுவாக நான் ஒரு படைப்பை உருவாக்குவதற்கு முன்னால் அங்கு சென்று பார்வையிடுகின்ற வழக்கம் எனக்குண்டு குறிப்பாக இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் சுந்தூர் எனும் பகுதியில் அந்த ஊரில் தலித்து மக்களை மேல் சாதிக்காரர்கள் வெட்டிக் கொன்றார்கள். நான் அங்கு உடனடியாக சென்று பார்வையிட்டேன் அந்த சம்பவத்தைப் பார்த்துவிட்டு வந்து அதை ஓவியமாக்கி மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தினேன். அதேபோல் ஆந்திராவின் சலக்குறுத்தி என்ற இடத்திலே பிற்படுத்தப்பட்ட ஒரு பெண்ணை உயர் ஜாதிக்காரர்கள் பாலியல் பலாத்காரத் திற்குட்படுத்தி அந்த பெண்ணை நடுவீதியில் நிர்வாணமாக அழைத்து வந்து கொடுமை செய்தார்கள் இதை ஊரேவேடிக்கைபார்த்தது. காவல்துறை வேடிக்கை பார்த்தது. எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள் யாரும் கேட்பதற்கு ஆளில்லாத நிலையில் அந்தப் பெண் கூனிக் குறுகியவாறு மக்கள் மத்தியிலேயே ஒரு சந்தைப் பகுதியில் நீண்ட நேரம்நிற்க வைக்கப்பட்டார் இதனையும் நான்நேரடியாக சென்று அந்த பெண்ணை சந்தித்து பேசி அந்த உணர்வுகளை உள் வாங்கிக் கொண்டு வந்து ஓவியமாக வெளிப்படுத்தினேன். அந்த ஓவியமே தமிழக மக்கள் மத்தியில் ஒரு செய்தியாக சென்றடைந்தது.

இப்படி ஒவ்வொரு இடத்திலும் சென்று பார்த்து ஓவியமாக்க வேண்டுமென்ற உந்துதல் எனக்கிருந்தது ஆனால் இதற்குமுன் என்னால் ஈழத்திற்கு வரக்கூடிய சூழல் கிடைக்கவில்லை. ஆனால் இப்போது இப்படியொரு சூழல் எனக்கு கிடைத்திருக்கின்ற நிலையிலே பல் வேறு இடங்களை சென்று பார்த்திருந்தேன். பாதிக்கப்பட்ட மக்களோடும் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடிகிறது அப்படி ஒரு நிலையில் பல்வேறு உணர்வுகளை இன்று நான் உள்வாங்கிக் கொண்டு வருகின்றேன். இவற்றை எல்லாம் ஓவியங்களாக படைக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கேற்பட்டிருக் கின்றது.நிச்சயமாக இதனூடாகவும் பல்வேறு படைப்புக்களை வெளிக்கொண்டு வருவேன்.

*** ஈழவிடுதலைப்போரை பற்றி நீங்கள் இந்தியாவில் இருக்கும் போதிருந்ததை விட இங்கு வந்து பார்த்தபின் எவ்வாறான உணர்வை பெற்றுள்ளீர்கள்?**

போராட்டத்தை பற்றிய எண்ணம் எனக்கு இங்கு வந்தபின்பும் சரி அங்கிருக்கும் போதும் சரி ஒரே உணர்வுதான் உள்ளது. எனக்கு இருவேறு உணர்வுகள் எப்போதும் இருந்த தில்லை. தமிழகத்தில் என்ன உணர்வோடு இருந்தேனோ அதே உணர்வோடுதான் இங்கும் இருக்கிறேன்.

# நுரைச்சோலை அனல் மின் திட்டத்தை யார் எதிர்த்தாலும் நடைமுறைப்படுத்துவோம்

## அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ

(கொழும்பு)

எவர் எதிர்த்தபோதும் மக்களுக்காக நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கப் போவதாக அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் பாலக்குடாப் பிரதேசத்தில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

யார் எதிர்த்தபோதும் நுரைச்சோலை அனல் மின்உற்பத்தி நிலையத்தினை அமைக்க வேண்டும் இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் நன்மையே முக்கியமானது. தனிப்பட்டவர்களது அரசியல் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டத்தை எதிர்ப்பது தவறானது என்றார்.

இதேவேளை நுரைச்சோலை அனல் மின்உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அனல் மின் உற்பத்தி நிலையம் நிறுவப்படுவது ஊடாக கற்பிட்டி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுமென முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.


## அறிவித்தல்

தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக்கிளை 2005 .05.23 ஆம் நாள் தொடக்கம் தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின் றோம்.

மேலாண்மைப்பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்.

(சி-11974)


- நீதிமன்ற உத்தரவை அடுத்து -

# ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திலிருந்து 5பேர் கைது

ஜே.வி.பி. பாராாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனின் அலுவலகத்தில் வைத்து ஐவரை ஹற்றன் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்ட அவர்கள், பின்னர் ஹற்றன் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதும், அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் கும்படி நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதுதொடர்பாக ஹற்றன் பொலிசார் தெரிவிக்கையில் , நீதி மன்றத்தின் பிடி ஆணை உத்தரவிற்கு அமையவே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.வட்டவளை மௌஜின் தோட்டத்தில் தம்மை பயமுறுத்துவதாக தெரிவித்து தொழிலாளர்கள் தோட்ட அதிகாரிக்கு எதிராக ஹற்றன் பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதேநேரம், குறிப்பிட்ட தொழிலாளிகள் தமக்கு அச்சுறுத்தலை விடுப்பதாக தெரிவித்து தோட்ட அதிகாரியும் பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று இரு தரப்பினரையும் மன்றில் ஆஜர் ஆகுமாறு ஹற்றன் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும் அந்த உத்தரவிற்கு அமைய, மன்றில் சமுகம் அளிக்காததை அடுத்தே இந்த ஐந்து தொழிலாளர்களும் கைது செய்யப் பட்டனர்.

இந்த ஐவரும் தமக்கு சட்ட உதவி கோரி, ஹற்றனில் உள்ள ஜே.வி.பி. அலுவலகத்திற்கு வந்திருந்த பொழுதே கைது செய்யப் பட்டனர்.இதற்கிடையே, இந்தச் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. யின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கருத்துரைக்கையில் தமது உறுப்பினர்களை பொலிசார் கடத்திச்சென்றதாக குற்றம் சுமத்தினார்

-பாடசாலை மாணவர்களுக்கு-

# இலவச போக்குவரத்து; பாராளுமன்றில் பிரேரணை

பாடசாலை மாணவர்களுக்கென இலவச பருவகாலச்சிட்டை வழங்கும் யோசனை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.பாராளுமன்ற உறுப்பினர் அருண் காமினி நாயக்க தனிமனித பிரேரணையாக பாராளுமன்றத்தில் இதனைச் சமர்ப்பித்துள்ளார். பாடசாலை மாணவர்கள் பயணிகள் வாகனத்தில் பயணஞ்செய்வதற்கு இலவச பருவகாலச்சிட்டை வழங்கப்படவேண்டுமெனவும் அவர்மேலும் கேட்டுக் கொண்டார்..


## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,கிளிநொச்சி

## வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான புத்தகப் பதிவுகளும் உடைய பின்வரும் விபரப்படியான வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 09.06.2005 ஆம் திகதி 10.00 மணிக்கு கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணிமனை வாகனத்தரிப்பிடத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிப்பு வைப்பாக 1000/=(ஆயிரம்) மட்டும் செலுத்தி பதிவு செய்து கேள்வியில் பங்கு கொள்ளலாம். வாகனங்களை இன்றிலிருந்து 08.06.2005 ஆம் திகதி வரை கடமை நேரங்களில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்தி வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வாகன விபரம்

| | |
|---|---|
| 01. பாரவூர்தி இசுஸ் | .. 265962 |
| 02. பாரவூர்தி இசுஸ் | .. 249645 |
| 03 ஈ. எல். எவ். வான் | .. 285528 |
| 04 இருசக்கர உழவு இயந்திரம் | |
| 05 உந்துருளி எம்டி-90 | .. 151-5491 |

பொதுமுகாமையாளர்,
கரைச்சிதெற்கு ப.நோ.கூ.சங்கம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

(சி.11972)



## கிளி/கிளிநொச்சி ம.வி.
## கல்விப் பணியைப் பாராட்டி
## நன்றி கூறுகின்றோம்

எமது வித்தியாலயத்தின் முன்புறத்திற்கு 100 அடி மதில் கட்டி அழகினையும், பாதுகாப்பினையும் ஏற்படுத்தித் தந்த பெற்றோர்

திரு. கு. அழகரெத்தினம்

(AKR, குழந்தை களஞ்சியம்)

உரிமையாளர் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நன்றி கூறும் அதேவேளை அவரது முன்மாதிரியான செயற்பாட்டினையும், கல்விச் சமூகத்தினர் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி

(சி-12006)




# இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து பரிசீலிக்கப்படும் என்கிறது அமெரிக்கா



சேதுசமுத்திர திட்டத்துக்கு ஒப்புதல் அளித்த பிரதமர் மன்மோகன் சிங்கை மத்திய அமைச்சர் டி. ஆர்பாலு நேரில் சந்தித்து சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தபோது

ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்குவது குறித்து அமெரிக்கா பரிசீலனை செய்கிறது.

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு இரத்து அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. இந்தியா தவிர பிரேசில் ஜேர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் இதேபோன்ற கோரிக்கையை முன் வைத்தன. இந்த நாடுகள் ஜி-4 நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 15இல் இருந்து 25ஆக அதிகரிக்கக்கோரி இந்தியா நகல் தீர்மானம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரிச்சர்டுபவுச்சர் கூறுகையில்; ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தங்களை நிரந்தர உறுப்பினர்களாக ஆக்க வேண்டும் என்ற ஜி4 நாடுகளின் கோரிக்கையை பரிசீலிக்க அமெரிக்கா தயாராகவுள்ளது. ஜப்பானுக்கு மட்டும் பாதுகாப்பு சபையில் இடம் தருவதற்கு நாங்கள் ஏற்கனவே ஆதரித்து வருகிறோம் என்றார்.

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல்




சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது 2427.40 கோடி இந்தியரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டம் மூன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றப்படவுள்ளது.

மன்னார் வளைகுடாவையும் பாக் விரிகுடாவையும் இணைக்கும் இத்திட்டம் மூலம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகடல் பகுதிகளிற்கிடையேயான கப்பல் போக்குவரவில் கணிசமான தூரம் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கப்பல்கள் செல்லும் வழியினையும், சேது சமுத்திரத்திட்டம் அமைந்த பின்னர் கப்பல் செல்லும் வழியையும் படத்தில் காணலாம்.

# அப்துல்கலாம் 14 நாட்கள் நான்கு நாடுகளில் சுற்றுப்பயணம்

இந்திய சனாதிபதி அப்துல்கலாம் நாளைவெளிநாடு புறப்படுகிறார். நான்கு நாடுகளிற்கு இவர் சுற்றுப்பயணம் செய்கிறார்.

சனாதிபதி அப்துல்கலாம் நான்கு நாடுகளில் பயணத்தை நாளை தொடங்குகிறார் ரஷ்யா, சுவிற்சர்லாந்து ஐஸ்லாந்து உக்ரைன் ஆகிய நாடுகளில் மொத்தம் 14 நாட்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்

நாளை டில்லியில் இருந்து தனி விமானத்தில் அப்துல்கலாம் நேராக ரஷ்யா செல்கிறார் ரஷ்சியா உருவான பிறகு அங்கு செல்லும் முதல் இந்திய சனாதிபதி அப்துல்கலாம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஜேர்மனியை சோவியத் யூனியன் வெற்றி கொண்ட 60ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்ட மொஸ்கோ உட்பட பல்வேறு நகரங்களை அப்துல்கலாம் பார்வையிடுவார். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்துவார்.

ரஷ்யப் பயணத்தை முடித்துக்கொண்டு வருகிற 24ஆம் திகதி கலாம் சுவிற்சர்லாந்து செல்கிறார். அங்கு ஜெனீவா, சூரிச் பெர்ன் ஆகிய முக்கிய நகரங்களைப் பார்வையிடு வார். அப்துல்கலாம் வருகையையொட்டி வருகிற 26ஆம் திகதியை விஞ்ஞான தினம் ஆக சுவிற்சர்லாந்து அரசு அறிவித்துள்ளது சுவிற்சர்லாந்து நாட்டு பாராளுமன்ற கூட்டம் தற்போது நடக்காததால் மந்திரிசபை கூட்டத்தில் கலாம் உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்து பயணத்தின் போது ஜெனீவாவில் உள்ள அணுஆராய்ச்சி மையம் உட்படபல்வேறு தொழில் நுட்பக் கூடங்களை பார்வையிடுவார் பெர்ன் நகரில் மறைந்த விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் வீட்டையும் கலாம் பார்க்கிறார்.

அதன்பிறகு ஐஸ்லாந்து செல்லும் அப்துல்கலாம் தலைநகர் ரெய்விக்கில் பூமி அதிர்ச்சி முன்னறிவிப்பு மையத்துக்குச் செல்கிறார். ஆழ்கடல் மீன் பிடிப்பையும் பார்வையிடுகிறார்.

ஐஸ்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு அடுத்த மாதம் ஜூன் 1ஆம்திகதி உக்ரைன் செல்கிறார் அங்கு நான்குநான் தங்கி இருப்பார். அங்கும் உக்ரைன் அதிபர் மற்றும் விஞ்ஞானிகள் தொழில் நுட்ப வல்லுநர்களைச் சந் தித்து பேசுகிறார் நான்குநாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு ஜூன் நான்காம்திகதி கலாம் டில்லி திரும்புகிறார்.

# மகமுத்அப்பாஸ் இந்தியா சென்றார்

இரண்டுநாள் பயணமாக புதுடில்லி சென்றடைந்துள்ள பலஸ்தீன அதிபர் மகமுத் அப்பாஸை வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமத் வரவேற்றார்.பலஸ்தீன மக்களுக்கு எப்போதும் போலவே இந்தியா தொடர்ந்து ஆதரவளிப்பது மகிழ்ச்சியளிப்பதாக பலஸ்தீன அதிபர் மகமுத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது பலஸ்தீன அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



## இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ். வீரர் கிரேக் ஷப்பல் நியமனம்



இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுநராக முன்னாள் அவுஸ்திரேலிய அணித் தலைவர் கிரேக் ஷப்பல் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு இது இரண்டாவது வாய்ப்பாகும்.

2007ஆம் ஆண்டு வரை இவர் ஒப்பந்தமாகியிருக்கும் அதேவேளை, இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவிக்கிறார். இவரது பயிற்சி வரும் ஓகஸ்டில் கொழும்பில் நடைபெறவுள்ள சிறிலங்கா அணியுடனான போட்டித் தொடருடன் ஆரம்பமாகும்.

அதனடிப்படையில் அவரது எதிரியாக சிறிலங்கா அணிக்கு பயிற்றுநராக வரும் சாத்தியத்தைக் கொண்டிருக்கும் டொம்மூடி விளங்குவார். ஷப்பல் பிரபல கிரிக்கெட் குடும்பத்திலிருந்து வந்த ஒரு வீரராவார். அவரது பாட்டனாரான விக்ரர் றிச்சட்சன், சகோதரர்களான இயன், ட்ரவர் ஆகியோரும் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்களாவர். 1972ஆம் ஆண்டு நடைபெற்ற விஸ்டன் விருது வரிசையில் இவர் ஐந்தாவது இடத்தைப் பிடித்தார். பெரும்பாலும் உள்நாட்டு அணியின் பயிற்றுநராகவே பணியாற்றிய இவர் கடந்த வருடம் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்றுநராக இணைந்தார்.

## ஹர்பஜன்சிங் பந்து வீச்சு சர்ச்சை

## இரண்டு வாரத்தில் முடிவு ஐ.சி.சி அறிவிப்பு



ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சு இரண்டு வாரத்தில் ஆய்வு செய்து முடிக்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன்சிங் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அவரது 'தூஸ்ரா' வகை பந்து வீச்சு சந்தேகத்துக்கு உள்ளானது.

இதுபற்றி போட்டி நடுவர்கள் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) புகார் தெரிவித்தனர். இதனால் மீண்டும் ஹர்பஜன் சர்ச்சையில் சிக்கினார்.இது குறித்து ஐ.சி.சி எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்தது.

இந்தநிலையில் ஆய்வு குறித்த அறிக்கை இரண்டு வாரத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீடு கூறுகையில்; ஏற்கனவே ஹர்பஜன்சிங்கிடம் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட ஆய்வு பதிவுகள் தயாராக இருக்கின்றன. அதனுடன் தற்போதுள்ள பந்துவீச்சு வீடியோக் காட்சிப் படமுள்ளது. ஆய்வு நேர்மையான முறையில் நடைபெறும் என்றார்.

# அப்துல் ரசாக் அபார பந்து வீச்சு

# மே.தீவின் தோல்வி தொடர்கிறது



ரசாக்கின் அபார பந்து வீச்சால் மே.தீவு அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் 59ஓட்ட வித்தியாசத்தில்வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் அணி மூன்று ஒருநாள் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக மேற்கிந்தியதீவு சென்றுள்ளது. முதல் ஒருநாள் போட்டி செயின்ட் வின்சென்டிலுள்ள கிங்ஸ்டன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற மே.தீவு பாகிஸ்தானை துடுப்பாட பணித்தது. அப்ரிடி விளாசலுடன் ஆட்டத்தை தொடக்கினார் 24 ஓட்டம் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆக அணியின் ஓட்ட வேகம் குறைந்தது.

நிதானமாக ஆடிய சல்மான்பட் (43), ஹயுனா (30) ஓரளவுக்கு ஓட்டம் சேர்த்தனர். தலைவர் இன்சமாம் 23 ஓட்டத்துடன் வெளியேறி ஏமாற்றம் அளித்தார். இதன் பின் வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பாகிஸ்தான் அணி 44.3 ஓவரில் 192 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. கடைசி ஏழு விக்கெட்டுகளைப் வெறும் 69 ஓட்டங்களுக்குப் பறிகொடுத்தது.

பின்னர் 193 ஓட்டம் என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய மே. தீவு வீரர்கள் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் ஏழு விக்கெட்டுகள் வெறும் 77 ஓட்டங்களில் வீழ்ந்தது. எட்டாவது விக்கெட்டுக்கு பிராவோ (27), பிராட்ஷா (17) ஜோடி அதிகபட்சமாக 39 ஓட்டம் சேர்த்தது. இறுதியில் 45.2 ஓவரில் 133 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வி



அடைந்தது. நான்கு விக்கெட்வீழ்த்தி பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமான ரசாக் ஆட்டநாயகன் விருது பெற்றார். இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் தொடரில் 1-0 என்ற முன்னிலை பெற்றுள்ளது. தென் ஆபிரிக்காவுக்கு எதிரான தொடரில் ஐந்து போட்டிகளிலும் வீழ்ந்த மே.தீவு அணிதொடர்ந்து பெறும் ஆறாவது தோல்வி இது. இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.



மொனாக்கோவில் 'பார்முலா ஒன்று கார் ரேஸ் போட்டிகள் நாளை தொடங்குகின்றன. இதில் பங்கேற்கும் ஸ்பெயின் வீரர் பெர்ணாண்டோ அலோன்சா பயிற்சி மேற்கொள்வதற்காக தனது காரில் புறப்பட ஆயத்தமாகிறார்.







மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய வலைப்பந்தாட்ட அணியின் 15 வயது பிரிவினர் பயிற்சி ஆசிரியருடன். (படம்: குகன்)

## மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டி

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. தமிழீழ மாணவர் அமைப்பும் கிளிநொச்சி வலயக்கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இப்போட்டியில் நேற்று வலைபந்தாட்டப் போட்டி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் முதலாம் இடத்தினையும், கிளி/பளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், 17வயதுப் பிரிவில் கிளி/ அக்காரயன் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், 19 வயதுப்பிரிவில் கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தினையும் பெற்றன.

அத்துடன் இன்று காலை ஒன்பது மணிக்கு 19 வயதின் கீழ் ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் கரைச்சி, [illegible] பளை, பூநகரிஆகிய கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்கள் [illegible] பற்றவுள்ளனர். (கு)

## இந்திய அணித் தலைவரை மாற்றவேண்டும் முன்னாள் வீரர்கள் தெரிவிக்கின்றனர்



இந்திய கிரிக்கெட் அணித் தலைவரை மாற்ற முன்னாள் ஆட்டக்காரர்கள் குரல் கொடுக்கத் தொடங்கி விட்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக இருக்கும் கங்குலியின் ஆட்டத்திறமை மிக மோசமாகவுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக அவர் விளையா[illegible]போது அவர் ஒவ்வொரு இன்னிங்சிலும்மிகக்குறைந்த ஓட்டங்களே எடுத்தார். இதனால் ரசிகர்களின் வெறுப்புக்கு ஆளானார். இந்த நிலையில் அவர் ஆறு போட்டிகளில் விளையாடக் கூடாது என்று சர்வதேச கிரிக்கெட் சபை தடைவிதித்தது. இப்போது புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என்கிற குரல்களும் கிளம்பியுள்ளன.

முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் வெங்கடேஷ்பிரசாத் நேற்று கொல்கத்தாவில் நிருபர்களிடம் கூறியதாவது,

புதிய தலைவரை நியமிக்க இதுவே சரியான தருணம். தலைவர் பொறுப்பை ஏற்க ராவிட் தயாராக இருப்பார். எந்த சூழ்நிலையிலும் நிதானமாக இருப்பது, அனுபவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டால் தலைவர் பொறுப்புக்கு ராவிட் மிக தகுதியானவராவார். ஆடுகளத்தில் சரியான முறையில் சிந்தித்து செயற்படுபவர். தலைவராக இருந்தாலும் ஆட்டத்திறன் பாதிக்கப்படாமல் செயற்படக்கூடியவர். கங்குலி மிகச் சிறந்த தலைவர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஜோன்ரைட் இருந்தபோதுதான் கங்குலியின் தலைமை சிறப்பாக இருந்தது. தற்போது அவர் விலகியதால் புதிய பயிற்சியாளருடன் இணைந்து செயலாற்ற கங்குலிக்கு நேரமாகும். ஆனால் ராவிட்டுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. எனவே ராவிட்டைத் தலைவராக நியமிப்பதுதான் இந்திய அணிக்கு சிறப்பாக இருக்கும் என்றார்.

### சிறுவர் விளையாட்டுவிழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிற்சர்லாந்துக் கிளையின் அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் கலைமகள் சிறுவர் பூங்கா விளையாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

துணுக்காய் தேறாங்கண்டல் பூங்காமைதானத்தில் இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள சிறுவர் விளையாட்டு நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விழா ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு காற்பந்து சுற்றுப்போட்டி

தமிழீழ மாணவர் எழுச்சிநாளையொட்டி தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பிரிவினர் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய உதைபந்தாட்டப்போட்டி அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி 3 இக்கு 0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (41)

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-05-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வன்முறைக்கு அத்திவாரம்

திருமலை நகரில்–மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் திடீரென முளைத்த புத்தர்சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் ஆணை பிறப்பித்தபோதும் அச்சிலை இன்னமும் அகற்றப்படவில்லை. அதனை அகற்றுவதற்கான எந்த வித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகவும் இல்லை.

அதுமாத்திரமல்ல அப்புத்தர்சிலையை அகற்றவேண்டிய சிறிலங்காப் பொலிசாரும், ஆயுதப்படையினரும் அச்சிலை அகற்றப்படாமல் இருப்பதற்குப் பாதுகாப்பு வழங்குவதோடு அச்சிலையைச் சூழ நிற்கும் சிங்களக் காடையர்களும் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

சிறிலங்காஆயுதப்படையினர், பொலிஸ்படையினரிடம் இருந்து தமிழ் மக்களுக்கு நீதி கிட்டாது என்பது தெரிந்ததொன்றுதான். ஆகையினால், புத்தர்சிலையை அகற்றுவதற்கு சிறிலங்காப் பொலிசார் நடவடிக்கை எடுக்காததொன்றும் ஆச்சரியத்துக்குரியது அல்ல. அத்தோடு சிறிலங்கா நீதித்துறையில் உள்ள சிலரிடமிருந்து நீதி கிடைக்கப்பெறுவதாலும் அது அமுலாகப் போவதில்லை என்பதற்கும் இச் சம்பவம் ஒரு எடுத்துக் காட்டாகும்.

இந்நிலையில் இச்சம்பவம் வெளிப்படுத்தும் முக்கியமானதொரு விடயம் சிறிலங்கா நீதித்துறையிடம் தமிழ்மக்களுக்கு நீதி கிட்டாது என்பது மட்டுமல்ல. தமிழ் நீதிபதிகளின் தீர்ப்புக்கள் செல்லுபடியற்றவை என்பதுமே ஆகும். அவ்வாறு இல்லாது விடில் நீதிபதி புத்தரின் சிலையை அகற்றுமாறு உத்தரவிடும்போது சிறிலங்காப் பொலிசார் புத்தர்சிலைக்கு எவ்வாறு பாதுகாப்பு அளிக்கமுடியம்?

இது மட்டுமல்ல தமிழ் நீதிபதிகள் தமது உத்தரவுகள் அமுல்படுத்தப்படாதபட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிலையிலும் இல்லை. அவ்வாறு இருந்திருப்பார்களே யானால் இதுவரையில் புத்தர்சிலையை அப்புறப்படுத்தாத பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் அல்லவா எடுத்திருத்தல் வேண்டும்?. ஆனால், அவ்வாறு எதுவும் நடந்ததாகவும் இல்லை. நீதிமன்றத் தீர்ப்பு அமுல்படுத்தப்படாததையிட்டு சிறிலங்கா நீதித்துறையோ அன்றி வேறு யாருமோ அக்கறை கொண்டதாகவும் இல்லை.

புத்தர்சிலையை அப்புறப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமைக்குத் தெரிவித்த முக்கியமான காரணம் ஒன்று அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் புத்தர்சிலை விவகாரம் மாறியுள்ளது என்பதே ஆகும். ஆனால், நீதிபதியின் உத்தரவு அமுல்படுத்தப்படாது போனதால் இச்சிலை விவகாரம் நீதிபதி தெரிவித்த கருத்துக்களுக்கு ஒப்பானதாக திருமலையின் அமைதிக்கும், இயல்பு வாழ்க்கைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாயுள்ளது.

கடந்த நான்கு நாட்களாக திருமலையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஹர்த்தால் ஆங்காங்கு நடந்து வரும் வன்முறைகள் மற்றும் அப்பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலை என்பன திருமலை மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கையைப் பாதித் துள்ளது மட்டுமல்ல பெரும் இன வன்முறை மூளலாம் என்றதொரு சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது.

விடுதலைப்புலிகளின் திருமலைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இதனைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ளதைப் போன்ற பாரிய வன்முறை ஒன்றை மேற்கொள்ளச் சிங்களக் காடையர்களும், சிறிலங்காப் பொலிசாரும் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக எழிலன் குற்றம் சாட்டியுள்ளமை களநிலையின் வெளிப்பாடே ஆகும்.

திருமலை மாவட்டத்தை கபளிகரம் செய்தல் என்பது சிங்கள பேரினவாத சக்திகளின் நீண்டகாலத் திட்டமாகும். இதற்கு வேறு வழிகளைஅவர்கள் கடைப்பிடித்து வந்ததுண்டு. இந்த நிலையில் திருமலை நகரசபைக்கு சொந்தமான காணியில் முன் அனுமதி எதுவுமின்றிப் புத்தர்சிலை வைக்கப்பட்டமையானது திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில் இத்தனை பெரிதாக புத்தர்சிலை ஒன்றை உடனடியாகப் பெற்றுக் கொண்டிருக்க முடியாது. அத்தோடு ஒரே இரவில் நிறுவியும் இருக்க முடியாது. மேலும் இப்புத்தர்சிலை நிறுவப்பட்டதன் நோக்கம் உயர்வானதாக இருக்குமானால் உரிய முறையில் சட்டபூர்வமான நடவடிக்கைகள் மூலம் இதனை மேற்கொண்டிருக்கலாம் திருட்டுத் தனமாக இரவோடு இரவாக ஏன் புத்தர்சிலையை நிறுவியிருத்தல் வேண்டும்?

சாந்தமே உருவான தியானம் செய்யும் புத்தர்சிலை மூலம் திருமலை மாவட்டத்தில் அமைதியைக் குலைப்பதற்குச் சிங்களப் பேரினவாதம் முயற்சி மேற்கொண்டிருப்பது இலங்கையிலுள்ள பௌத்த சிங்களவருக்கும், பௌத்தரின் போதனைகளுக்கும் இடையிலான தூரத்தையே வெளிக்காட்டுவதாயுள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில் சாந்தியையும், கருணையையும் போதித்த ஒருவரின் சிலையை வன்முறைக்கு அத்திவாரமாக இட இவர்கள் முனைவார்களா?

# அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி;
# சர்வதேச நாடுகள் சில அதிருப்தி

அம்பாந்தோட்டையில் சீன நிறுவனம் ஒன்றின் உதவியுடன் துறைமுக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு சர்வதேச நாடுகள் சில அதிருப்தி வெளியிட்டுள்ளதாக துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தூரகிழக்கு நாடுகளுக்கும், வளைகுடாப் பகுதிக்கும் இடையில் கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் கப்பல்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்கக்கூடிய வகையில் இந்தத் துறைமுகத்தில் நிலக்கீழ் எரிபொருள் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இதன் மூலம் ஏறத்தாழ 100 கப்பல்கள் இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்தும் என்றும், இதன் மூலம் அதிகளவு வருமானம் பெறப்படும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்த நடவடிக்கை காரணமாகத் தற்போது இந்தக் கப்பல்களுக்கான எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளும் துறைமுகங்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் சிலதரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளபோதிலும் அது குறித்து தாங்கள் கவலைப்படப் போவதில்லை என்றும் மங்கள சமரவீர தெரிவித்தார்.இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கும் முக்கிய வெளிநாட்டு சக்திகள் குறித்து கருத்து வெளியிட மறுத்த அமைச்சர் தமது கூட்டணி அரசாங்கத்தினுள்ளேயே இந்தத் திட்டத்திற்கு எதிரானவர்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இந்தத் துறைமுக அபிவிருத்தித் திட்டம் சுமார் 75 முதல் 80 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# சனாதிபதியின் கேள்விக்குப் பதிலளிக்க தொலைக்காட்சிச் சேவையில் சந்தர்ப்பம் வழங்குக!

## ரில்வின் சில்வா கோரிக்கை

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கடந்த 16ஆம் திகதி ரூபவாகினி தொலைக்காட்சி உரையின்போது வெளிப்படையாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க தமக்கு ரூபவாகினி சேவையிலேயே சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமெென ஜே.வி.பி. யின் செயலர் ரில்வின் சில்வா கேட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போர் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதற்கு செலவாகும் 50 பில்லியன் ரூபாவையும், போர் முனைக்கு தமது பிள்ளைகளையும் தருவார்களா? எனக் கடந்த 16 ஆம் திகதி ரூபவாகினி தொலைக்காட்சியில் உரையாற்றும்போது சந்திரிகா எழும்பிய வினாவுக்கே அதே தொலைக்காட்சியில் பதிலளிக்க இடமளிக்குமாறு தொலைக்காட்சி சேவைத் தலைவரை ஜே.வி.பி செயலர் ரில்வின் சில்வா கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அவர் மேலும் தனது கடிதத்தில் சனாதிபதி சந்திரிகா நேர்காணலின் போது குறிப்பிட்ட கருத்துக்களில் உண்மையில்லை என்றும் விடுதலைப்புலிகள் அரசியல் நீரோட்டத்துக்குள் வந்திருப்பதாக சந்திரிகா குறிப்பிட்டதில் தவறு இருப்பதாகவும் அதற்கு உதாரணமாக அண்மையில் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கருத்தைக் கூறலாம் என்றும் தெரிவித்த ரில்வின் தனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்காதுவிட்டால் அது கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் பெரும் கறை என்றும் தெரிவித்துள்ளார்.

# விமானப்படை அதிகாரியின் வீட்டில் ரவைகள், சீருடைகள் மீட்பு

விமானப்படை அதிகாரி ஒருவரின் வீட்டில் இருந்து விமான எதிர்ப்பு சுடுகலன்களுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் மற்றும் விமானப்படை யினரின் சீருடைகள் என்பன நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன.

புரிகஸ்வெவ விமானப்படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரின் வீட்டில் தேடுதல் நடத்திய கொள்வத்த பொலிசார் இந்தப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டில் இருந்து 15 விமான எதிர்ப்பு சுடுகலன் ரவைகளும், பெருமளவான சீருடைகளும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

# சிறார் போராளிகள் குறித்த தகவல் தவறு குழந்தைகளுக்கான அமைப்பு வருத்தம்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சிறார் போராளிகள் எண்ணிக்கை குறித்து இங்கிலாந்தில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பான அமைப்பு வெளியிட்ட அறிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

50 ஆயிரம் ஆண் சிறார் போராளிகளும் 21500 பெண் போராளிகளும் புலிகள்இயக்கத்தில் இருப்பதாக இந்த அமைப்பின் அறிக்கை கூறியிருந்தது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையே இது என்றும் தமது அமைப்பின் அறிக்கையில் தவறான தகவல் இடம்பெற்று விட்டதால் வருத்தம் தெரிவிப்பதாகவும், இந்த அமைப்பு அறிவித்துள்ளது. தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அனுப்பிய கடிதத்தில் இந்தத் தகவல்களை அந்த அமைப்புத்தெரிவித்துள்ளது.

# இராணுவத்திலிந்து 20 ஆயிரம் பேர் சமாதான காலத்தில் தப்பியோட்டம்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து இதுவரை 85,000 படை வீரர்கள் தலைமறைவாகியுள்ளனர் என இராணுவத் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதில் 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின் இருபதாயிரம் பேர்கள் தலைமறைவாகி உள்ளார்கள் என்றும் ஏனையோர் 2002 ஆம் ஆண்டுக்கு முன்னதாக தலைமறைவாகி உள்ளார்கள் என இராணுவத் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

தலைமறைவாகியுள்ள அனைவரையும் சட்ட பூர்வமாகப் படையில் இருந்து நீக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தப்பியோடிய படையினர் தாமாகவே முன்வந்து விலகிக் கொள்ளலாம் என மேஜர் ஜெனரல் டி.டி.ஆர்.சில்வா தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்புக்கெதிராக நாடுபூராகவும் எதிர்ப்புக்கூட்டங்கள்

## —ஜாதிக ஹெல உறுமய தீர்மானம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நாடு முழுவதிலும் தொடர்ந்து பிரச்சாரங்களை மேற்கொள்ள ஜாதிகஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

நேற்றுக் கூடிய அந்தக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் பொதுக் கட்டமைப்புக்கெதிராகக் கூட்டங்களை நடத்தப்போவதாக ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றாலே ஐக்கிய இலங்கை சாத்தியமாகும்

## -பாராளுமன்றில் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே ஐக்கிய இலங்கை என்ற ஒன்று சாத்தியமாகமுடியும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான முழுநாள் விவாதம் ஒன்றுக்கான பிரேரணையை முன் வைத்துப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு அங்கு கருத்துத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இடைக் கால நிர்வாகசபையைக் கோரிய போது அதனை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வர வில்லை.

தற்போது அவர்கள் கடற் கோளினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உடனடி நிவாரண உதவி களை வழங்குவதற்கான பொதுக் கட்டமைப்பொன்றைக் கோருகிறார் கள் என்று குறிப்பிட்ட இரா. சம்பந் தன்,

கடற்கோள் நிவாரணத்துடன் மட்டுமே சம்பந்தப்பட்ட இந்தச் சிறிய நிர்வாகக் கட்டமைப்பையும் வழங்குவதற்கு இலங்கை அர சாங்கம் முன்வராவிட்டால், அது தமிழ் மக்களுடைய உரிமைகளை நசுக்குகின்ற செயற்பாடாகவே கணிக்கப்படும் என்றும் தமதுரை யில் கூறினார்.

பொதுக்கட்டமைப்பை இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத் தினால் மாத்திரமே இந்த நாட்டில் இனிமேல் சமாதானம் சாத்தியமா கும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மேலும் வலியுறுத்தினார்.

# இன்று நடைபெற இருந்த சிகிச்சை நாளை நடைபெறுமென அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள பொது மருத்துவ நிபு ணர் ஜெயராஜா அவர்களினால் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இன்று நடைபெறவிருந்த பொது மருத்துவ சிகிச்சைகள் நடைபெற மாட்டாதென மருத்துவமனையி னர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிகிச்சைகள் நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமெனவும் உயர் குருதி அமுக்கம், சலரோகம், தொய்வு போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெறவிரும்புவோர் புதுக்குடியி ருப்பு பொன்னம்பலம் மருத்துவ மனை வெளிநோயாளர் பகுதி யுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டியுள்ளனர். (சோ)

## புத்தர்...

றும் இஸ்லாமிய மத குருமார்களும் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட் டுள்ளனர். சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்றும்படி கோரி ஹர்த்தாலை ஒழுங்கு செய்த திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரனையும் இம் மாநாட்டில் பங்கு பற்றுமாறு பொலிசார் அழைப்பு விடுத்துள்ளனர். விக்கினேஸ்வரன் மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

இதே வேளை கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு வந்து மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரம் பற்றி நேரில் உள்ளூர் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரை யாடினார் என்று அறிவிக்கப்பட்டது. இதனிடையில் திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரியா வெள்ளிக்கிழமை இரவு திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா சோ. இரவிச்சந்திரக் குருக்களை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். இப்பேச்சுக்களில் ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்கதேசிகரும் கலந்து கொண்டார் என்று பொலிஸ் வட் டாரங்கள் கூறின. (25)

# இல.சமாதான முயற்சிகள் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

## -ஐ.தே.கட்சியில் பலர் பாராளுமன்றத்திற்கு செல்லவில்லை

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற் சிகள் தொடர்பாக பாராளுமன்றத் தில் நேற்று இடம்பெற்ற முழுநாள் விவாதத்தில் ஐக்கிய தேசியக் கட் சியின் பாராளுமன்ற உறுப்பினர் கள் பலர் கலந்துகொண்டிருக்க வில்லை.

கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக் கிரமசிங்க உட்பட, கட்சியின் பல முக்கிய உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் பங்கேற்றிருக்க வில்லை.

ஐக்கியதேசியக்கட்சியின் பேச் சாளரும், பாராளுமன்ற உறுப்பின ருமான ஜீ.எல்.பீரிஸ் மற்றும், ஜய லத் ஜயவர்த்தன ஆகியோர் மாத் திரமே இந்த விவாதத்தில் பங் கேற்றனர்.

எனினும், தற்போது பிரதான விடயமாக கருதப்படுகின்ற பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுதி யான நிலைப்பாட்டை இவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவிக்க வில்லை.

இந்த விவாத்தில் கலந்து கொண்ட ஆளுங்கட்சி உறுப்பின ரும், ஊடக அமைச்சருமான மங்கள சமரவீர, பொதுக்கட்டமைப் புத் தொடர்பில் உறுதியான நிலைப் பாடெதனையும் வெளியிட ஐக்கிய தேசியக் கட்சி பின்னடிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

சில கட்சிகள் பொதுக்கட்ட மைப்பைத் தாம் எதிர்ப்பதாக உறு தியான நிலைப்பாட்டை வெளி யிட்டு வருகின்றனர் என்று சுட்டிக் காட்டிய அமைச்சர் மங்கள சமர வீர ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தாம் எந்தவொரு நிலைப்பாட்டை யும் உறுதியாக வெளியிடத் திரா ணியில்லாத முதுகெலும்பற்றவர் களாக இருப்பதாகவும் குற்றஞ்சாட் டினார்.

## கிளிங்டன் இல.விஜயம்

அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளின்டன் எதிர்வரும் 27 ஆம் திகதி சிறிலங்கா வருகை தரவுள்ளார். ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்தின் ஆழிப்பேரலைப் பணிகளுக்கான விசேட தூதுவராக வருகை தரும் அவர் இரு நாட்கள் சிறிலங்காவில் தங்கி நிற்பார்.

## வீரமுனை...

சென்றுள்ளனர். மூவரில் இருவர் பலத்த காயமடைந்துள்ளார்கள். சம மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இம்மூவரும் தற் போது மேலதிக சிகிச்சைக்காக மட் டக்களப்பு போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்

இந்தச் சம்பவம் தொடர்பாக தக வல் வெளியிட்டிருக்கும் தமிழீழ விடுத லைப் புலிகளின் அம்பாறை மாவட்டம் வீரமுனை கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆதீஸ்வரன் மாஸ்டர், சிறிலங்கா படைப்புலனாய்வுப் பிரி வுடன் செயற்படும், ஆயுதக்குழு உறுப்பினர்களே, தமது அலுவலகத்தை தாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தாக்குதல் நடாத்தியவர்கள் காரைதீவு சிறிலங்கா விசேட அதிரடிப்படை யினரின் முகாமைநோக்கிச் சென்றதை இப்பகுதி பொதுமக்கள் அவதானித் துள்ளதாகவும்,

இது தொடர்பாக தமக்கு அறி வித்ததாகவும் கடந்த சில தினங் களாக தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் துறைப் பிரிவினரின் நடமாட்டங்களை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அவதானித்து வருவது தொடர்பில்,

தாம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களி டம் முறைப்பாடு செய்திருந்ததாகத் தெரிவித்துள்ள ஆதீஸ்வரன் மாஸ்டர்,

இந்த நிலையில் தமது அரசி யல்த்துறை பணிமனைமீது தாக்கு தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இராணுவம்..

போர் நிறுத்த ஒப்பந்தம் அமு லில் இருக்கிறது. யாழ். மாவட்டத் தில் சிவில் நிர்வாகமும் நடைபெறு கின்றது. இந் நிலையில் இராணு வத்தினர் இவ்வாறான விபரங் களைத் திரட்டுவது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் ஒரு செய லென இராணுவத் தரப்பினருக்குச் சுட்டிக்காட்டியதாகக் கூறினார்.

இதேவேளை சுமார் ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்ற இந் தச் சந்திப்பின்போது போரினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்க்ள் மீது பிரயோகிக்கப்படும் இராணுவ நெருக்கடிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடு களுக்கு ஏற்படும் குறுக்கீடுகள் மற் றும் பொதுமக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள படையினர் அங்குள்ள பனைதென்னை மரங்களை அழித்தல் மற்றும் பல்வேறு விட யங்கள் தொடர்பாக படையினருக் கும் போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவினருக்கும் எடுத்துக் கூறி யதாகவும் அவர் மேலும் கூறினார்.

## உந்துருளியில்...

கொண்டிருந்த ஹைஏஸ் வாகனத்துடன் விபத்துக்குள்ளா னது. இதில் உந்துருளியில் பின் னால் இருந்து பயணித்த அராலி மத்தி-கானபத்தை-வட்டுக் கோட்டை யைச் சேர்ந்த 19 வயதுடைய நடராசா சதீஸ்வரன் என்பவர் படு காயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் மரணமானார் இச்சம் பவம் குறித்து அப்பகுதி காவல் துறையினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (08)

## திருமலை....

இயங்கவில்லை.

காலையில் பொதுமக்கள் தங் களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குவதற்காக ஒரு கதவைத் திறந்து வைத்திருந்த கடைகளின் முன்பாகத் திரண்டிருந்த தைக் காணமுடிந்தது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளும் செவ்வாய்க் கிழமை தொடக்கம் பூட்டப்பட்டிருந் தது. கூட்டுறவுச் சங்கத்தின் எரி பொருள் நிலையம் நேற்று வெள்ளிக் கிழமை சில மணி நேரம் திறந்திருந்தது. பொதுமக்கள் திரண்டு நின்று மண் ணெண்ணை, டீசல் மற்றும் எரிபொருளை முண்டியடித்துக் கொண்டு வாங்கினர். வங்கிகள் தொடர்ச்சியாக செயற்படாததால் அரச ஊழியர்கள் தங்களின் சம்பளத்தைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று வெள்ளிக் கிழமை நண்பகல் அளவில் திரு கோணமலை நகர சந்தைப் பகுதி யில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை யடுத்து நகரம் வெறிச்சோடியது. அதனையடுத்து மத்திய வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன் பகுதி தாக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.திருகோணமலையில் தமிழ் இளைஞர்கள் மீது சிங்களக் காடையர்கள் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை நடத்தியுள்ள னர். திடீர் புத்தர்சிலையின் அச்சத் தில் தமிழ்மக்கள் வாழ்ந்துவரும் சூழலில் தொடரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் கரணமானவர் கள் என்று கூறி இரு தமிழ் இளை ஞர்களை சிறிலங்காப் பொலிசார் கைது செய்தனர். இந்த இளைஞர்கள் மீதே சிங்களக் காடையர்கள் காட்டு மிராண்டித்தனமான தாக்கதலை நடத் தியுள்ளனர். இவர்கள் இருவரும் படு காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் சந்தேகத்தின் அடிப்படை யில் தமிழர்களைக் கைது செய்யும் அசாதாரண சூழலையும் சிங்களப் பொலிசார் தொடங்கியுள்ளனர். நக ரின் முக்கிய பகுதிகளில் பொலிசார் மற்றும் படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டது. புத்தர் சிலை அமைந்து பேருந்து நிலையப் பகுதிக்கு சன நடமாட்டத்தைப் படை யினர் கட்டுப்படுத்தினர். இதே வேளை, நிலாவெளியில் இருந்து வந்த ஒருவர் சிறிமாவோபுர எனும் இடத்தில் வைத்துத் தாக்கப்பட்டார். வெட்டுக் காயங்களுக்குள்ளான அந் நபர் திருகோணமலை பொதுவைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். காயங்களுக்குள்ளான வேறு சிலரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் படடிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வேறு மாவட்டங்களிலிருந்தும் பொலி சார் திருகோணமலைக்கு தருவிக் கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழன் இரவு 11.00 மணியளவில் திரு கோணமலை நகரில் பத்தாம் குறிச்சி யில் அமைந்துள்ள விவேகானந்த மீனவ சங்கத்தின் பணிமனை இனந் தெரியாதோரின் குண்டுத் தாக்கு தலுக்கு லக்கானது. அப்போது வீடு கள் சி மற்றும் படகுகள் சில சேதமடைநததாகவும் சங்க வட்டாரங் கள் தெரிவித்தன. வீதிவிளக்குகளை அணைத்துவிட்டு வந்தே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அப்போது படையினர் அப்பகுதியில் காவலில் இருந்ததாகவும் சங்கத்தூதுக்குழு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் முறையிட் டது. பத்தாம் குறிச்சியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் குண் டுத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும், பாதுகாப்புக்கோரியும் வெள்ளிக்கிழமை காலை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலகத்தின் முன்பாக அமைந்திருந்து சத்தியாக் கிரகம் செய்தனர். அவர்களில் மூன்று பேர் கொண்ட குழு, போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் அலுவலகத்திற்குள் சென்று தாக்குதல் பற்றிய முறைப்பாட்டைச் சமர்ப்பித்து நிலை மையை விளக்கினர். இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அதன் பின்னர் அப்பகுதி மக்கள் பாதுகாப்பின்றி கஷ்டமடைந்த னர் என்றும், தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் சங்கத் தூதுக் குழு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடம் கோரியது. பொலிசாருடன் தொடர்பு கொண்டு உரிய நடவ டிக்கை எடுப்பதாக கண் காணிப்பாளர் சோறேன் அன்டர்ஸன் உறுதியளித் தார்.

இந்நிகழ்வை போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைமை அலு வலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். அத னையடுத்து கண்காணிப்புக் குழு அலுவலகத்தின் முன்னால் அமர்ந் திருந்த பெண்கள் கலைந்து சென்ற னர். அதனையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்பு உறுப்பினர்கள், குண் டுத் தாக்குதலுக்கு இலக்கான விவே கானந்த மீனவர் சங்கக் கட்டடம் மற்றும் பகுதிகளைப் பின்னர் சென்று பார்வையிட்டனர். (25)

## யாழ்.இல்....

அத்துடன் தொலைபேசி மூல மான மிரட்டல்களும் இருந்து வரு வதாகவும் பாதிக்கப்பட்ட ஊடக வியலாளர்களால் தெரிவிக்கப் படுகிறது. இவ்வாறு ஊடக வியலாளர்களை அச்சுறுத்தும் செயல்களில் ஈடுபடுவோர் இரா ணுவ புலனாய்வுதுறையினராக இருக்கலாம் எனவும் சந்தேகிக் கப்படுகிறது. (33).

## காணவில்லை

சீவரட்ணம் சுதர்சன் என் பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் சில ஆவணங் கள் கடந்த 18.05.2005 அன்று முகமாலை சோதனைச் சாவ டிக்கும் கிளிநொச்சிக்குமிடை யில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதப் பணிமனை ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மா னம் வழங்கப்படும். (சி.11978)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.